Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 336

ஞாயிற்றுக்கிழமை
27 ஒக்ரோபர் 2024

ஐப்பசி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60




# நவ. 14 ஆம் திகதி தேர்தல் நடக்காது?

**கொழும்பு, ஒக்ரோபர் 27**

நாடாளுமன்றத் தேர்தலுக்கான நாளாக நவம்பர் மாதம் 14ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், அந்தத் திகதியில் பெரும்பாலும் மாற்றம் ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகத் தெரியவருகின்றது.

14

## அடுத்த வருடத்தில் மாகாணத் தேர்தல்!

கொழும்பு, ஒக். 27

அடுத்த வருடத்துக்குள் மாகாணசபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல் என்பன முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

14

## நவம்பர் 14 தேர்தல் ஜனாதிபதி உறுதி!



கொழும்பு, ஒக். 27

நவம்பர் மாதம் 14ஆம் திகதியன்று தேர்தல் நடக்கும். நவம்பர் 21ஆம் திகதி தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும் என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.

14

## தமிழ் மக்கள் கூட்டணியினர் மீது கோப்பாயில் கொடூரத் தாக்குதல்!

மூவருக்குக் காயம்: ஒருவர் தீவிர சிகிச்சையில்

யாழ்ப்பாணம், ஒக். 27

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரம்பொன் பகுதியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட தமிழ் மக்கள் கூட்டணியினர் மீது நேற்றுக் கொடூரத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

14

முச்சந்தி முரளி



“ நடக்குமென்பார் அது நடக்காது, நடக்காதென்பார் அது நடந்துவிடும்”

## திருநெல்வேலியில் நேற்று முதியவரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 27

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலிப் பகுதியில், சைக்கிளுக்கு மேல் விழுந்த நிலையில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சின்னத்தம்பி சிறிராகுலன் (வயது-79) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

14

## நாட்டின் பாதுகாப்பு கட்டுப்பாட்டுக்குள்!

ஐரோப்பிய ஒன்றியத்திடம் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 27

இலங்கையின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், சுற்றுலாவிகள் அச்சமின்றி நாட்டுக்கு வரமுடியும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்துள்ளார்.

14

## 'யாழ்தேவி' நாளை மீண்டும் பயணம்!

கொழும்பு, ஒக். 27

'யாழ்தேவி' ரயில் நாளை திங்கட்கிழமை காலை 5.45 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன் துறைக்குப் பயணத்தை ஆரம்பிக்கும் என்று ரயில்வே திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

14

தெல்லிப்பழையில்

## வீடொன்றின் மீது நேற்றுத் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையில் உள்ள வீடொன்றின் மீது, நேற்று அதிகாலை வேளையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதிகாலை ஒரு மணியளவில் வீட்டுக்குள் நுழைந்த மர்மக் குழுவொன்று வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்துச் சேதப்படுத்திவிட்டு, சில உடைமைகளை

14

தெல்லிப்பழை மருத்துவமனையில்

## குருதித் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், ஒக். 27

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவில் தற்போது குருதித் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14

## ரயில் - ஹைஏஸ் விபத்து உயிரிழப்புகள் தவிர்ப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 27

காங்கேசன்துறையிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த யாழ்ராணி ரயிலும் ஹைஏஸ் வாகனமொன்றும் மிருசுவில் பகுதியில் நேற்று மாலை விபத்துக்குள்ளாகியுள்ளன.

14

## கிணற்றுக்குள் இருந்து கைக்குண்டுகள் மீட்பு!

நீதிமன்ற அனுமதி பெற்று தேடுதல் நடத்தத் திட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 27

பருத்தித்துறையில் உள்ள கிணறொன்றுக்குள் இருந்து பெருமளவு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை துறைமுகத்துக்கு அருகாமையில் உள்ள கிணற்றுக்குள் இருந்தே பத்துக்கும் மேற்பட்ட

14

சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசியல் கலாசாரம் இங்கும் மாறவேண்டும்

## மணிவண்ணன் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஒக். 27**

**இந்த மண்ணிலும் அரசியல் மாற்றம் ஏற்பட்டவேண்டும். அந்த மாற்றம் ஊடாக புதிய அரசியல் கலாசாரம் ஏற்பட்டு புதியவர்கள் நாடாளுமன்றுக்கு அனுப்பப்படவேண்டும் - இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீங்கள் கடந்த காலங்களில் யாருக்கு வாக்களித்தீர்களோ, அவர்கள் பல்வேறு கட்சிகளாக இன்று உங்கள் முன் வந்துள்ளார்கள். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நாடாளுமன்றிலிருந்தும் தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யாதவர்கள் இன்று பல்வேறு வடிவங்களில் உங்கள் முன் வருகின்றார்கள்.

தமிழ் மக்கள் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் முன்னைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரையும் தேர்ந்தெடுக்காமல், இளையோரை, தகைமையுடையோரை, பல்துறை ஆளுமைகளை கொண்டோரை கொண்டுள்ள ஒரே ஒரு தரப்பான மான் சின்னத்தில் போட்டியிடும் எங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எந்தவொரு கட்சிக்கு வாக்களித்தாலும் அதில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவரே மீண்டும் நாடாளுமன்றம் செல்வார். அதனூடாக எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. கடந்த காலத்தில் எதனை செய்தோம். எதிர்காலத்தில் எதனை செய்யப் போறோம் என்று உங்கள் முன் சொல்லக் கூடிய ஒரே ஒரு தரப்பும் நாங்கள் தான்.

நவீன தமிழ்த் தேசிய வாதத்தை முன் வைக்க உள்ளோம். அதனை முன்னெடுத்து செல்ல உங்கள் ஆணையை உங்களிடமிருந்து வேண்டிக்கொள்கிறோம் - என்றார். (ஒ-20)

# ஓர் அரிசி மணியைக்கூட இறக்குமதி செய்யோம்

## உடன்பாட்டுக்கு வராவிட்டால் சட்ட நடவடிக்கை என்கிறார் அநுர

கொழும்பு, ஒக். 27

சுற்றுலாத்துறைக்குத் தேவையான அரிசியைத்தவிர ஓர் அரிசி மணியைக்கூட நாம் இறக்குமதி செய்யமாட்டோம்-இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத் தொழில்துறைக்கு அவசியமான அரிசியைத் தவிர ஓர் அரிசி மணியைக் கூட நாங்கள் இறக்குமதி செய்யமாட்டோம். கமக்காரர்களுக்கு பலம்பொருந்திய வருமான வழிவகை கிடைக்கின்ற வகையில் விவசாயத்துறையில் நிலைமாற்றத்தை ஏற்படுத்த நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம்.

அதைப்போலவே, ஓய்வூதியம் பெறுநர்களுக்கு, அஸ்வெசும பயனாளிகளுக்கு, பாடசாலைபிள்ளைகளுக்கு கொடுப்பனவை பெற்றுக்கொடுப்பதற்கான திட்டங்களை வகுத்து அரச சேவையை வினைத்திறன் கொண்டதாக மாற்றியமைக்க இலங்கையில் முதல் தடவையாக கட்டியெழுப்பப்பட்டுள்ள மக்கள் நேயமுள்ள அரசாங்கம் செயலாற்றி வருகின்றது- என்றார். (ஒ-இ)




உடுவில் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு புன்னாலைக் கட்டுவன் வடக்கு கிராம அலுவலர் நவரட்ணம் நவசாந்தன் தலைமையில் புன்னாலைக் கட்டுவன் வடக்குத் திடற்புலத்தில் அமைந் துள்ள ஒளிநிலா முன்பள்ளி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் உடுவில் பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ச-25, 66)



2024 ஆம் ஆண்டுக்கான குடிசனத் தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ள சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்தபுதன்கிழமை இடம்பெற்றது. (ச-25, 66)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற தேர்தல் –2024

## தமிழ் மக்கள் கூட்டணி





**மான்** இற்கு வாக்களிப்போம்



9

**வி.மணிவண்ணன்**

முதன்மை வேட்பாளர், முன்னாள் முதல்வர்,



# பாராளுமன்றத் தேர்தல்-2024

**யாழ் - கிளி தேர்தல் மாவட்டம்**

ஐக்கியம் ஜனநாயகம் தேசியம்
எனும் தளத்தில் நின்று இன்றுவரை போராடும்....
எமது தாயகத்தின் உரிமைப் போராளி.



தோழர்

**சுரேஷ் பிரேமச்சந்திரன்**

அவர்களுக்கே உங்கள் வாக்கு



ஐக்கியம் – தேசியம் – ஜனநாயகம்

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி (DTNA)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**களத்தில் கமல்,** தமிழர் பரப்பில் மக்கள் எதிர்பார்க்கும் ஆளுமையுள்ள புதியவர் இவர்... ஆளுமை மிக்கவர்களும், இளைஞர்களும் அரசியலை வெறுப்புடன் பார்க்கும் தருணத்தில் அதில் இருந்து மாறுபட்ட கோணத்தில் நம்பிக்கையுடன் கமலின் அரசியல் பயணம்...

**அரசியல் மூலம் மக்கள் பணி,** தமிழர் பரப்பான சுயத்திலும், புலத்திலும் பலமான அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதே எமது நோக்கமாகும். கடந்த 15 வருடங்களாக இணக்க அரசியல் என்ற பெயரில் சரணாகதி அரசியலையும், எதிர்ப்பு அரசியல் என்ற பெயரில் வினைத்திறனற்ற செயற்பாட்டையும், சுயநலத்திற்காக பிளவுபட்ட கட்சிகளையும் விடுத்து நேர்மையான வினைத்திறனான அரசியலுக்கு...

**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்,** தமிழர் பரப்பான வடக்கு, கிழக்கினை மையப்படுத்திய தமிழ்த்தேசியமான சுயத்திலும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் புலங்களான இலங்கையின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த பகுதிகளையும் (உ+ம்: கொழும்பு) உலகெங்கும் பரந்து வாழும் நம் தமிழரை மையப்படுத்த, இங்கிருந்து...

**2024 பாராளுமன்ற தேர்தல்,** சமூகத்தில் இளம் தொழில் முயற்சியாளராக 2016 ஆம் ஆண்டு வணிகத் தொழிலிலும், 2018 ஆம் ஆண்டு சட்டத்தரணியாக சட்டத்துறையிலும் கால்பதித்து சுயமாக தொழிற்பட்டு வந்தார். அந்த வேளையில் 2020 ஆம் ஆண்டு முதலே மக்களுக்கு அரசியல் தலைமைத்துவம் தேவையுள்ளதை அறிந்திருந்தும், தன்னை பொருளாதார ரீதியாகவும், சமூக மட்டத்தில் அனுபவ ரீதியாகவும், சமூகத்தை நன்கு அறியப்பட வேண்டிய தேவைப்பாடு கருதியும் பொறுமையுடன் அவதானித்து வந்தார். பின்னர் 2023 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநகரசபை தேர்தலில் களமிறங்கி அறிமுகத்தை ஏற்படுத்திய போதும் 2025 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் இலக்கை நோக்கி பயணித்த வேளையில், 2024 ஆம் ஆண்டு எமக்கான களம்...

**மாற்றத்திற்கான நம்பிக்கை,** 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு பின்பு தொடர்ந்து வலதுசாரி கொள்கை கொண்ட ஆட்சி காணப்பட்டு தற்போது இடதுசாரி பின்னணியுடைய இலங்கை அரசியல் தளத்தில் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு புதியதோர் மாற்று அரசியலும், மாற்று அரசியல் அணியை உருவாக்கக்கூடிய சிந்தனையாளர்களினதும், செயற்பாட்டாளர்களினதும் தேவைப்பாடு அவசியம். காலங்காலமாக காலாவதியான சுயநல அரசியலை மட்டுமே மேற்கொண்டமையால் தமிழ் மக்கள் அரசியலில் வெறுப்படைந்துள்ள இந்நிலையில் சுயத்தை இழக்காது தமிழர்களது அரசியல் அபிலாசைகளுடன் பொருளாதார வளமேம்பாட்டை நோக்கி...

**சுயேட்சைக்குழு - 2,** வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன், எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புது விடியலை நோக்கி பயணிக்கட்டும் என தன் காலில் தான் நிற்றலே தமிழர்களுக்கான பேரம் பேசும் ஆற்றலை அதிகரிக்கும். ஓர் சீரமைக்கப்பட்ட தலைமைத்துவ கட்டமைப்பு அற்ற பல தேசிய கட்சிகள் மற்றும் தமிழ்த்தேசிய கட்சிகளின் பற்றாக்குறையே எனது அரசியல் அறவழிப் பிரவேசம், சுயவிருப்பத்துடன்...




# நாடாளுமன்றத் தேர்தல் -2024



## K.V.தவராசா

சுயேச்சைக்குழு -14



தமிழர்களின் நீதிக்காக 43 வருடங்களாக போராடுபவருக்கே **உங்கள் வாக்கு**



43 வருடங்களாக பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் மூலம் கைது செய்யப்பட்ட போராளிகளுக்காக 1000 க்கும் மேற்பட்ட வழங்குகளை அச்சமின்றி வெற்றிகரமாக எதிர்கொண்டவர் ஜனாதிபதி **சட்டதரணி கே.வி.தவராசா.** பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட முதல் வழக்கு குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் வழக்கில் சிவசிதம்பரம், நவரத்னம் (கரிகாலன்) ஆகியோருடன் தமிழனத்துக்கான தனது சட்டப்போராட்டத்தைத் தொடங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# எந்தச் சலுகைகளுக்கும் விலை போகமாட்டோம்

## சோமநாதன் பிரசாத் தெரிவிப்பு!

மன்னார், ஒக். 27

நாங்கள் எவ்வித விட்டுக் கொடுப்புகள் மற்றும் சலுகைகளுக்காக விலை போகவில்லை இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் சோமநாதன் பிரசாத் தெரிவித்தார்

மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் கடந்த 15 வருடங்களாக எமது கட்சி எவ்வித ஊழல் மோசடிகளும் இன்றி கட்சி, சின்னம், தலைமை போன்றவை மாறாமல் பயணித்துக் கொண்டிருக்கிறோம். மக்களுக்கான உரிமை தொடர்பாக குரல் கொடுத்து வரும் இயக்கமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி செயற்பட்டு வருகிறது. நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எமது கட்சி சார்பாக வன்னித் தேர்தல் தொகுதியில் மன்னாரில் இருந்து நான் போட்டியிடுகின்றேன். எனக்கு உங்கள் வாக்கினை செலுத்தி வெற்றி பெறச் செய்யுங்கள் - என்றார். (ரி-56)






# ஆக்கத்திறன் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 27

ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாணவர்களுக்கான தேசிய நல்லிணக்கம் மற்றும் சமூக ஒருமைப்பாடு தொடர்பான ஆக்கத்திறன் போட்டிகள் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றன. பிரதேச செயலக சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். மல்லிகா தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில், ஊர்காவற்றுறை பிரதேசக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். (ஒ-25-159)

# ஆசிரியர் தினவிழா

சாவகச்சேரி, ஒக். 27

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தின விழா தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி. கமலராஜன் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப 2மணிக்கு இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி அ. நித்திலவர்ணன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்களான சு. கிருஸ்ணகுமார், சு. சுந்தரசிவம், த. கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் (ஒ-ரி-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தக வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.27
யாழ்ப்பாண மேலாளர்கள் மன்றத்தின் இரு மொழிப் புத்தக வெளியீட்டு விழா "வடக்கு மாகாண நீர் வளங்களும் அவற்றின் பயன்பாட்டு உத்திகளும் பங்கீட்டுக் கொள்கையும்" எனும் தொனிப்பொருளில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் யாழ். தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன், விவசாய நீர்பாசன அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகூ, கிளிநொச்சி யாழ். பல்கலைக் கழக பொறியியல் பீட பேராசிரியர் தி.திருவரன், கிளிநொச்சி யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடப் பீடாதிபதி கலாநிதி ஆ.கணேஷ்வரன், பொறியியல் சேவைகள் பதில் பிரதிப் பிரதம செயலாளர் எந்திரி ந.சுதாகரன்,கிளிநொச்சி யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடக் கலாநிதி பா.கேதீசன், கிளிநொச்சி யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடக் கலாநிதி ப. கதிர்காமநாதன், வடக்குமாகாண மேலதிக மாகாண நீர்பாசனப் பணிப்பாளர் எந்திரி த.ராஜகோபு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-45)

# தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள் பிரச்சினைகளை உருவாக்குகின்றனர்

### கூட்டணியின் வேட்பாளர் கண்ணன் தெரிவிப்பு

வவுனியா, ஒக். 27
தமிழ்த்தேசியம் சார்ந்த அனைவருமே மக்களை சிந்திக்கவிடாத அரசியலைச் செய்கின்றனர். மக்கள் பல்வேறு துன்பத்தில் உள்ளபோது அவர்கள் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின்வன்னிமாவட்ட முதன்மை வேட்பாளர் சந்திரகுமார் கண்ணன் தெரிவித்தார்.
வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:- அரசியலுக்கு வருகின்ற அனை வருமே மக்களுக்குச் சேவை செய்யப்போகின்றோம் என்று சொல்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை கடந்த 14 வருடங்களாக வன்னி மாவட்டத்தில் உள்ள மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடக்கம் அன்றாடப் பிரச்சி னைகள் வரை நன்கு அறிந்தவன் நான். மாற்றம் என்பது மக்கள் மத்தியில் இருந்தே வரவேண்டும் - என்றார். (ஒ-110)

## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.27
வடக்கு மாகாணமட்ட ஆங்கிலதினப் போட்டியில் வெற்றி பெற்ற தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்துகொண்டார்.
தென்மராட்சிக் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் கிறிஸ்தோபர் கமலராஜன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்களின் பெற்றோர் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் கல்வி சார்ந்த அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் ஆங்கில தினப் போட்டியில் வெற்றிபெற்ற 15 மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ரி-26-66)



## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.27
மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை இணைந்து நடத்தும் மாபெரும் குருதிக் கொடை முகாம் நிகழ்வு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை நடைபெறவுள்ளது.
குருதிக்கொடை முகாமில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஒ-ரி-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தொடங்கும் புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். ஆதாயம் கிடைக்கும். அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் வகையில் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும். வீண் விவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது. சிவ வழிபாடு நன்மை தரும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு உண்டாகும். தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** தொட்ட காரியங்கள் துலங்கும் என்றாலும் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். மகாவிஷ்ணுவை வழிபடுவதன் மூலம் சிரமங்கள் குறையும்.

**கடகம்:** நீண்ட காலமாக இழுபறியாக இருந்த அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். பணவரவுக்கும் வாய்ப்புண்டு. திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினை ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**துலாம்:** அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படும். செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**விருச்சிகம் :** அனுகூலமான நாள். தேவையான பணவரவு உண்டாகும். எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆறுமுகப் பெருமானை வழிபாடு அதிர்ஷ்டம் தரும்.

**தனுசு:** சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மகாலட்சுமி வழிபாடு நன்மைகளை அதிகரிக்கும்.

**மகரம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். ஆஞ்சநேயர் வழிபாடு நன்மைகளை அதிகரிக்கச் செய்யும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. செலவு செய்யவேண்டி இருக்கும். வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விநாயகரை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் அதிகரிக்கும். சக வியாபாரிகளால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

## பரப்புரை

யாழ்ப்பாணம், ஒக்.27
யாழ்.குடாநாட்டில் பொதுத்தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் வேட்பாளர்கள் காப்பற் வீதிகளில் தமது இலக்கச் சின்னங்களை வரைந்தும், பல்வேறு இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டியும் வருகின்றனர். அத்துடன் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள்எனதேர்தலில் களமிறங்கியிருக்கும் வேட்பாளர்கள் பரப்புரையிலும் ஈடுபட்டு வருகின்றனர். (ரி-17)

# திறப்பு விழாவும், பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக்.27
அச்சுவேலி மத்திய கல்லூரியில் இளையதம்பி ஆறுமுகம் ஞாபகார்த்த மண்டபத் திறப்பு விழா கல்லூரி முதல்வர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப. 10.39 மணிக்கும், பரிசளிப்பு விழா இளையதம்பி ஆறுமுகம் ஞாபகார்த்த மண்டபத்தில் எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கும் இடம்பெறவுள்ளது. திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தி.யோன் குயின்ரஸ், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வி.சாரங்கன், பழைய மாணவரும், ஓய்வுநிலை பொறியியலாளருமான வை.சதானந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலாநிதி ஆறுமுகம் புண்ணியமூர்த்தி, சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜமுனா இராஜசீலன், பழைய மாணவரும், ஓய்வுநிலை அதிபருமான திருமதி புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை, வலிகாம வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் நடராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கல்விக்கு ஏனிந்தக் கஞ்சத்தனம்?


உலகிலேயே, கல்விக்கு மிகக்குறைந்தளவு தொகையை ஒதுக்கீடு செய்யும் நாடுகளின் பட்டியலில் இணைந்திருக்கின்றது இலங்கை. இதன்படி, உள்நாட்டுப் போர்களும், ஆயுதக் கலாசாரமும், போதைப்பொருள் கடத்தல் மாபியாக்களின் சொர்க்கபுரியாகவும் உள்ள ஹெய்ட்டி, லாவோஸ் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இலங்கை பெயரிடப்பட்டிருக்கின்றது. நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெறும் 1.5 வீதத்தை மாத்திரமே கல்விக்காக இலங்கை ஒதுக்குகின்றது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

மருத்துவத்தையும் கல்வியையும்தான் உலக நாடுகள் இன்று தமது ஆகப்பெரும் மூலதனங்களாகக் கொண்டிருக்கின்றன. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை கல்விக்குள் உட்புகுத்தி, அடுத்த நூற்றாண்டுக்கான மாணவர்களின் தொழிலுலகை உருவாக்குவதில் அத்தனை நாடுகளும் போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக வறுமையும் வறட்சியும் எஞ்சியிருக்கும் சியாரா லியோன், மாலி மற்றும் உகாண்டா ஆகிய ஆபிரிக்க நாடுகள் கூட இதற்கு விதிவிலக்கில்லாமல், கல்விக்கான தமது ஒதுக்கீடுகளை மடங்குகளால் அதிகரித்திருக்கின்றன. இவை தமது உள்நாட்டு உற்பத்தியில் 10 வீதத்துக்கும் மேற்பட்ட தொகையை கல்விக்காக ஒதுக்கீடு செய்வதாக எண்பிக்கப்பட்டிருக்கின்றது. நிலைமை இவ்வாறிருக்கையில் இலங்கையின் கதையோ 'கழுதை தேய்ந்து கட்டெறும்பாக மாறியிருக்கின்றது'.

உள்நாட்டுப் போரொன்றை எதிர்கொள்ளும் பூமியில் பொருளாதாரப் பின்னடைவும், கற்றறிந்தோர் தொகையில் வீழ்ச்சியும் ஏற்படுவது யதார்த்தமே. ஆனால், போருக்கும் இலங்கையின் இப்போதைய கல்விச் செல்நெறிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எதற்கெடுத்தாலும் உள்நாட்டுப்போரைக் காரணம்காட்டி தப்பித்துக் கொள்வதைப்போன்று இந்த விடயத்தை நோக்கிவிட முடியாது. புலிகள் அழிக்கப்பட்ட பின்னரும், தேசியப் பாதுகாப்புக்கான ஒதுக்கீடுகள் வருடாவருடம் வளர்ந்தே வருகின்றன. பௌத்த சாசன அமைச்சுக்கான தொகையோ வானைப் பிளக்கும் அளவுக்கு வியாபிக்கின்றது. ஆனால், கல்வியோ கதிகலங்கித் தேடுவோரற்று தெருவில் நிற்கின்றது. எத்தனை பெரிய அபத்தம் இது?

இலங்கை கடந்த சில வாரங்களாக, புதியதொரு கட்டமைப்பை மேம்படுத்தி வருகின்றது. அதாவது, நாட்டின் சிறைக்கூடங்களில் நிலவும் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக புதிய சிறைச்சாலைகளை அமைக்கவும், இருக்கும் சிறைச்சாலைகளை விஸ்தரிப்ப தற்கும் முடியுமான அத்தனை முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. நாட்டின் கல்விக்கான ஒதுக்கீடுகளை அதிகரித்து, கற்றறிந்தோர் சமூகத்தை மேம்படுத்தினால் அந்த நாட்டில் சிறைச்சாலை களுக்கான தேவை தானாகக் குறையும். இது தான் ஸ்கன்டிநேவிய நாடுகளின் கொள்கை. ஆதலால்தான், ஸ்கன்டிநேவிய நாடுகள் தங்களின் சிறைச்சாலைகளை 'வாடகைகள் மூலம் பணம் உழைக்கும் நிலையங் களாக' மாற்றிவைத்திருக்கின்றன.

சிறைச்சாலைகளை கட்டமைக்கவும் 'உருவாக்கவும்' விஸ்தரிக்கவும் காட்டும் அக்கறையில் பாதிகூட கொழும்பிடம் இல்லை. ஆபிரிக்க நாடுகள் பாடமெடுக்கும் பரிதாப நிலையில்தான், இலங்கையின் கல்வியின் நிலை தற்போதுள்ளது.




# அநுரவுக்கு கால அவகாசம் கொடுக்க வேண்டும்

## மனோ கோரிக்கை



**கொழும்பு, ஒக். 27**

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இந்நாட்டின் தேசிய இனப் பிரச்சினை என்ற தீரா சவாலுக்கு தீர்வாக முன் வைத்துள்ள ஒரே யோசனை, 2015 முதல் 2018 வரை நல்லாட்சியில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுத்த புதிய அரசமைப்பை உருவாக்கும் நோக்கிலான சர்வகட்சி கலந்துரையாடலை முன்னேடுப்போம் என்பதாகும். ஜனாதிபதி அநுரகுமாரவின் இந்த யோசனையை நாம் வரவேற்கிறோம்.**

இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
அநுர ஆட்சிக்கு வந்த இந்த ஒரே மாதத்துக்குள்ளேயே நாட்டின் அனைத்து சவால்களுக்கும் பதில் தரவேண்டும் என்ற குறுகிய அரசியலையும் நாம் செய்யவில்லை.
புதிய அரசுக்கு நியாயமான அவகாசம் கொடுக்கப்படவேண்டும் என நாம் எண்ணுகிறோம். மாறிவரும் இன்றைய அரசியல் சூழலில், நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகும், அரசமைப்பை உருவாக்கும் உரையாடலில் ஆளுமையும், அனுபவமும் உள்ள சிறுபான்மை மக்கள் பிரதிநிதிகள் பங்குபெற வேண்டுமா? இல்லையா? என்பதை தமிழ் வாக்காளர்கள் தீர்மானிக்க வேண்டும் - என்றார். (ஒ-இ)

# கரும்பலகைக்கு பதில் ஸ்மார்ட் பலகைகள்

கொழும்பு, ஒக்.27
பாடசாலைகளில் கரும்பலகைக்கு பதிலாக ஸ்மார்ட் போட்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன. முதற்கட்டமாக ஆயிரம் ஸ்மார்ட் போட்கள் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. (ஒ-25-6)

## சசிகலா வீட்டின் மீது கல்வீச்சு

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் சசிகலா ரவிராஜின் வீட்டின் மீது கல்வீச்சுத் தாக்குதல் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவரின் அயல் வீட்டிலுள்ள தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர் ஒருவராலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சசிகலா குற்றம் சுமத்தியுள்ளார். (ஒ-20,26,27)

## சங்குப்பிட்டிப்பாலத்தை பார்வையிட்ட பிரதீபன்

யாழ்ப்பாணம், ஒக். 27
கேரதீவு சங்குப்பிட்டிப் பாலப் புனரமைப்பு வேலையை நேற்றுக் காலை யாழ்ப்பாண மாவட்ட பதில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் நேரடியாக பார்வையிட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடி புனரமைப்பு வேலைகளின் முன்னேற்றத்தை கேட்டறிந்து கொண்டார். (ஒ-26,27)

## நாட்டரிசிக்கு கட்டுப்பாடு விலை

யாழ்ப்பாணம், ஒக். 27
நாட்டரிசிக்கான கட்டுப்பாட்டு விலை 220 ரூபா எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது நாட்டரிசியை 218 ரூபாவுக்கு (மொத்த விலை) வழங்குவதற்கு அரிசி ஆலை உரிமையாளர்கள் சம்மதம் தெரிவித்தனர். அதேவேளை நாட்டரிசியை கட்டுப்பாட்டு விலைக்கு கூடுதலாக விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் படி பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபை செயலர் நயீமுதீன் சகல மாவட்ட அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளார். (ச-6)

## நாளை

28.10.2024

திங்கட்கிழமை - ஐப்பசி - 11

சுபநேரம் : 12.03 - 01.33

இராகுகாலம் : 07.33 - 09.03

## நாளொரு நல்வார்த்தை

**உயர்ந்த மனிதர் சொற்களில் பலவீனமாக இருந்தாலும் நடத்தையில் மிக உறுதியாக இருப்பர்.**

- கன்பூசியஸ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் பயணம்

**2010** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் போட்டியிட்டு 3461 வாக்குகளை பெற்றேன்

**2010** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டேன்

**2013** — மாகாணசபை தேர்தலில் 10,034 வாக்குகள் பெற்று வடக்கு மாகாண சபைக்கு தெரிவானேன்

**2015** — பாராளுமன்றத் தேர்தலில் [illegible] வாக்குகள் பெற்று தேசியப்பட்டியலூடாக தெரிவானேன்

**2018** — பிரதி விவசாய அமைச்சராக பொறுப்பேற்றேன். 140 நாட்கள் பிரதி அமைச்சராக கடமையாற்றினேன்

**2015** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட தலைவராக நியமிக்கப்பட்டேன்

**2015** — யாழ் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு இணைத்தலைவராக நியமிக்கப்பட்டேன்



**2018** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டேன்

**2018** — யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியின் விசேட திட்டங்களின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டேன்

**2019** — யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டேன்

**2024** — ஜனநாயக தேசிய கூட்டணியின் பிரதித்தலைவராக நியமிக்கப்பட்டேன்.

**2020** — யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டேன்

**2020** — பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளராக நியமிக்கப்பட்டேன். இளவயதில் அப்பதவியை பெற்றுக்கொண்ட உறுப்பினராக விளங்கினேன்

**2020** — பாராளுமன்றத் தேர்தலில் 36,365 வாக்குகள் பெற்று மாவட்டத்தின் அதிகூடிய விருப்பு வாக்கு பெற்ற உறுப்பினராக பாராளுமன்றத்துக்கு தெரிவானேன்

## 01.அடிப்படை வசதிநலன்

நிறைவான கிராமம்
**271,195**
பயனாளிகள்
793 திட்டங்கள்
ரூ 864,787,864 ஒதுக்கீடு

மலசல கூடம்
**914**
பயனாளிகள்
ரூ 65,500,000
ஒதுக்கீடு

மூளாய் கிராமத்துக்கு
**4 மில்லியன்**
ரூபாய் பெறுமதியில் நனோ தொழில்நுட்பத்துடன் கூடிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

வீட்டுத்திட்டம்
**3484**
வீடுகள்
ரூ 2,733,600,000
ஒதுக்கீடு

## 2. உட்கட்டமைப்பு மற்றும் சமூக மேம்பாட்டு நலன்

வீதி புனரமைப்பு
180 திட்டங்கள்
**321+ KM**

விளையாட்டு கழகங்களுக்கான
விசேட உதவித்திட்டம் 2023
பயனாளிகள் **10,000**

விளையாட்டு மைதானம்
**30** திட்டங்கள்
ரூ 88,500,000 ஒதுக்கீடு

ஆலய புனரமைப்பு
**60** திட்டங்கள்
ரூ 6,000,000 ஒதுக்கீடு

## 03.விவசாயம் மற்றும் உற்பத்தி

வர்த்தக பயிர் விதைகள்
**1110 பயனாளிகள்**

2 விவசாய களஞ்சியம்

16 உற்பத்தி கிராமங்கள்
**1,292 பயனாளிகள்**
ரூ 100,000,000 ஒதுக்கீடு

விவசாய குளங்கள்
புனரமைப்பு
**10 திட்டங்கள்**
ரூ 36,700,000 ஒதுக்கீடு

வீட்டுத்தோட்ட வாழ்வாதாரம்
**1185 பயனாளிகள்**

Spray pump
**85 பயனாளிகள்**



## 04.போருக்கு பின்னான மீள் குடியேற்றம் மற்றும் இழப்பீடுகள்

யுத்தத்தால் ஏற்பட்ட சொத்திழப்பு கொடுப்பனவு
**253 பயனாளிகள்**
ரூ 2,488,752 ஒதுக்கீடு

இலவச மின்சார இணைப்பு
**2005 வீடுகள்**
ரூ 45,000,000 ஒதுக்கீடு

நீண்டகாலமாக எமது மக்கள் எதிர்கொண்டிருந்த சட்ட ஆவணங்கள், பதிவுகள், இழப்பீடுகள் தொடர்பாக தீர்வுகளை பெற்றுக் கொள்ள கூடியவகையில் "நீதிக்கான அணுகல்" நடமாடும் சேவையை நீதி அமைச்சுடன் இணைந்து முன்னெடுத்தமை

வடக்கில் போரினால் அங்கங்களை இழந்த மற்றும் இதர காரணங்களால் அங்கங்களை இழந்த வறுமைப்பட்ட மக்களை கருத்தில்கொண்டு ஜெய்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாமை யாழ் மாவட்டத்தில் நடாத்தியமை.

## 05.பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி
**1500**
பயனாளிகள்

கிராமிய கைத்தொழில் ஊக்குவிப்பு
**424**
பயனாளிகள்

GLOCAL Fair
நடமாடும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டம்

வடமாகாண தொழில்துறை நிலையத்தின் சாயம் நிலையத்தை மேம்படுத்தல்
**150**
பயனாளிகள்

பற்றிக் பயிற்சி நிலையம்
**500**
பயனாளிகள்
ரூ 95,750,000 ஒதுக்கீடு

வாழ்வாதார திட்டங்கள்
**7289**
பயனாளிகள்

## 06.நிதி மற்றும் ஏனைய வளர்ச்சித்திட்டங்கள்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம்
**35000** பயனாளிகள் — **347** திட்டங்கள்
2018-2019 ரூ 20,000,000 ஒதுக்கீடு
2021 ரூ 10,000,000 ஒதுக்கீடு

150 மில்லியன் விசேட நிதி 2024
**35000**
பயனாளிகள்

3 மில்லியன் வேலைத்திட்டம் 2022
**80000**
பயனாளிகள்
ரூ 272,704,000 ஒதுக்கீடு

# ...றிக்கை (2020 - 2024)

...பியல் [ballot box] X 1
யாழ்
இருப்பியல் [ballot box] X 1
...யத் தலைமை கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனை
### அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 15 . 01 . 1958

உதிர்வு 27 . 09 . 2024

கடந்த 27.09.2024 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் வைத்திலிங்கம் வரதலிங்கம்
(ஆயுர்வேத வைத்தியர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் "கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் 29.10.2024 செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணிக்கு "பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய மண்டபத்திலும்" இடம்பெறவிருப்பதனால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கடந்த 27.09.2024 வெள்ளிக்கிழமை அன்று எமது குடும்பத் தலைவர் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி, சமூக ஊடகங்கள் ஊடாக ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்கள், உறவினர்கள், உத்தியோகத்தர்கள், நண்பர்கள், உதவிய நல்லுள்ளங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இவ் அழைப்பினைத் தனிநபர் அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கணேஸ்வரம்,
அளவெட்டி.

திருமதி றூபினி வரதலிங்கமும்,
குடும்பத்தினரும்.

(CS 17063A-1)

## 31ம் நினைவு நாள் அழைப்பிதழ்



தோற்றம் 14.04.1948 — மறைவு 28.09.2024

கடந்த 28.09.2024 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### செல்வமணி குணம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று 26.10.2024 சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (28.10.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(CS/56550) J-1

குடும்பத்தினர்



## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.27

நல்லூர்ப் பிரதேசசபை நூலகங்களின் தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழா நல்லூர்ப் பிரதேசசபைச் செயலாளர் யு.ஜெலீபன் தலைமையில் நல்லூர்ப் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனையின் உளநல மருத்துவ நிபுணர் சி.சிவதாஸ் பிரதம விருந்தினராகவும், யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பெ.வசந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர்ப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் 'உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே' எனும் தொனிப் பொருளில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன. போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-25, 66)

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 03 . 1938

மறைவு 26 . 10 . 2024



### கந்தசாமி மகாலட்சுமி

கற்பகப்பிள்ளையார் கோவிலடி, இலக்கணாவத்தை உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி மகாலட்சுமி நேற்று (26.10.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், வீரகத்தி கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், திருவண்ணன், நாவேந்தன் (இலங்கை மின்சார சபை), உதயணன், பகீரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வத்சலா, வித்தியாசினி, திருமகள், சுவர்ணகலா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிதர்சினி, நேத்திரன், தர்சனா, திலோசன், சேயோன், மாயோன், தனுசன், யதுசன், திலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 01.00 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 737 5066

கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
இலக்கணாவத்தை, உடுப்பிட்டி.

(CS/56549) J-1

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 10.07.1938 — மறைவு 24.10.2024

### கனகசபை பாலகிருஷ்ணபிள்ளை

அன்பான எனது மாமாவே,
கண்ணாடி அம்மையாவே
எங்கே சென்றீர்கள்!!
காற்றோடு கலந்த உங்கள் சுவாசம்
கண்ணீராய் வடிந்த எங்கள் பாசம்
உலகினை கடந்து போனாலும்
ஒரு நல்ல மனிதனாய் உங்களோடு
பயணித்தவர்கள் மறந்து போகமுடியுமா
கலையாத நினைவுகளுடன் உதிரும்
கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து உங்கள் ஆத்மா
சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

*ஓம் சாந்தி சாந்தி*

மருமக்கள் - கலா, மோகன்.
பேரப்பிள்ளைகள் - லக்சன், கௌசி, பகீர்த்தனா, ஜெசிக்கா, யதுவுஷிகா, டினேஷ்
பூட்டன் - அஸ்வின்

(cs. 56544) (N-1)

### ஊழியர்களுக்கு இலவச பாஸ்

கொழும்பு,ஒக்.27

போக்குவரத்து அமைச்சு புகையிரத திணைக்கள ஊழியர்களுக்கு இலவச பாஸ்களை வழங்கத் திட்டமிட்டுள்ளது. இந்த பாஸ்களை புகையிரத திணைக்கள ஊழியர்கள் தமது இருப்பிடத்திலிருந்து கடமைக்குச் சென்று வருவதற்கு பயன்படுத்த முடியும். இதன் மூலம் வினைத்திறனுள்ள சேவையை மக்களுக்கு வழங்கலாம் எனவும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. (25- 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ் கோண்டாவில் கிழக்கு பலாலி வீதியில் இருந்து 300m தூரத்தில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு.

077 841 1895, 077 077 9026

(CS/56541) J-1

## தேவை

மரத்தளபாடங்கள் தேவை, செய்து தருபவர்கள் தொடர்பு கொள்ளவும். (யாழ். நகரில்)

தொடர்பு: 076 821 9414

## காணி விற்பனைக்கு

முருகமூர்த்தி வீதி, வண்ணார் பண்ணை முனிசிப்பல் எல்லைக்குட்பட்ட 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 846 0804

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறூட், ரகன் புறூட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கை, பப்பா, பொம்பினேசி மா, அல்போன்சோ மா, கோப்பி, பட்டர்புறூட், ரம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்தான், ஏலக்காய், சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்துரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, உரும்பிராய் மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

(CS/56309) J-1

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகர் பகுதியில் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து ஏறத்தாழ 100m தொலைவில் 4.5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. வர்த்தகர்களுக்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த நிலப்பரப்பாகும். முகவர்கள் தேவையில்லை. பி.ப. 4.00 மணிக்குப் பின் தொடர்புகளை மேற்கொள்ளலாம்.

தொடர்பு: 075 777 1885

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவ குடும்பம் (V) 1987 பூரட்டாதி, 7ல் செவ்வாய் பாவம் 52 சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணப் பெண்ணை எதிர் பார்க்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 923 6287

## காணி விற்பனைக்குண்டு

மருதனார் மடம் உரும்பிராய் வீதி - 2, 1 3/4 பரப்பு திருநெல்வேலி நாவலடி வீதி - 1 பரப்பு 5.36 குளி 20 அடி தார் பாதை வீதி உண்டு.

தொடர்பு:
077 104 8865

## Vacancy-TO

யாழிலுள்ள நிறுவனத்திற்கு A/L தேர்ச்சி பெற்ற TO,QS தேவைப்படுகின்றனர்.

தொடர்பு: 078 502 9616

## MK Visa Work (PVT)

- 12 இலட்சம் ஐரோப்பா செல்லும் உங்கள் கனவை கங்கேரி Work Permit மூலம் நிறைவேற்றல்.
- பிரான்ஸ் Visit Visa 3 வாரங்களில்.

சகல விதமான Visit, Student, Work விசாக்களுக்கும் நிராகரிக்கப்பட்ட விசாக்களுக்கும். தொடர்பு கொள்ளவும்.

077 604 0373, Whatsapp: 074 035 2940

## கார் வாடகைக்கு உண்டு

Allion கார் (வெள்ளை - CAB) மாதாந்த வாடகைக்குக் கொடுக்கப்படும்.

077 732 2720

(CS/1692) J-1

## யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி
### (தேசிய பாடசாலை)
### பழைய மாணவர் சங்கம்


**ஆயுட் சந்தா உறுப்பினர்களின் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தலும் புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளலும்**

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. இதன் காரணமாக ஆயுட் சந்தா உறுப்பினர்கள் தங்களுடைய அங்கத்துவம் அங்கத்தவர் பதிவேட்டில் இருப்பதனையும் புதிய அங்கத்தவர்கள் தங்களுடைய பதவினையும் **10.11.2024** ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பதாக செயலாளரிடம் தொடர்புகொண்டு உறுதிப்படுத்தலினையும் பதிவினையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர் - திரு.சி.சிவச்செல்வன்
முகவரி - C.P.M. வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்.
தொ.எண் - 077 614 5244

(cs 56523) N-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 06 . 1933

மறைவு 25 . 10 . 2024

### நல்லையா செல்லம்மா

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா செல்லம்மா அவர்கள் நேற்று முன்தினம் (25.10.2024) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா நல்லையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சிவகுரு, தம்பிராஜா, இரத்தினம் மற்றும் தங்கமுத்து, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், குலரஞ்சிதம், குலராசா, நவராசா (கனடா), ரவிராசா (கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் செல்வராணி, நகுலேஸ்வரி (கனடா), கலாமோகினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சசீலா (பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்), ஸ்ரீமயூரன் (கனடா), சுதர்சினி, சுபாசினி, சுதாகரன் (லண்டன்), சுபாகரன் (பிரான்ஸ்), சுகந்தினி (பிரதேச செயலகம் பச்சிலைப்பள்ளி), சுஜிகரன், சுதர்சன் (பிரான்ஸ்), அஜந்தன் (கனடா), பாமிலா (கனடா), டிலன் (கனடா), ரஜிந்தன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியாரும், கிதுசனா, பிரவிந், பவினஜா, அர்ச்சயன், ரிஷிகேசன், தபர்ணா, லதுர்ஷன், மிதுர்னா, டிவிஷா, பருதிக், பிரஷான், ஜனலியா, ஜென்சிகா, ஜெசிக்கா, வினித், விகான், கிசான் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.10.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வங்களா வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை,

தகவல் :
குடும்பத்தினர்

(CR/43484) J-1

## நாடுகடத்தல்

அமெரிக்காவில் சட்டவிரோதமாகத் தங்கியிருப்போரைக் கைது செய்து, அவர்களை நாடுகடத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வாடகைக்கு

வவுனியாவில் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் சுப்பர்மார்கெட் (உணவகம்) நாளாந்த அடிப்படையில் கொமிசனுக்கு வழங்கப்பட உள்ளது.

தொடர்பு:- 076 669 4693

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம் சங்கானை
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில By. ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்.
குபேரன் கட்டடமாடி, பிரான்பற்று வீதி, சங்கானை

Tel. 077 675 1649

## வீடு வாடகைக்கு

யாழ். கந்தர்மடத்தில் மாடி வீட்டின் மேல் பகுதி மட்டும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 253 0865

## அறைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் பெண்கள் தங்குவதற்கான அறைகள் (Rooms) வாடகைக்கு விடப்படும்.

077 737 4970

(cs56547) N-1

## வீடு விற்பனைக்கு / வடகைக்கு

வவுனியாவில் பட்டாணிச்சி புளியங்குளம் 2ம் ஒழுங்கையில் அமைந்துள்ள 1 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு / வாடகைக்கு உண்டு.

077 824 9208, 077 699 2197

## சிறிய வீட்டுடன் காணி விற்பனைக்கு

கே.கே.எஸ் வீதி, கொக்குவிலில் 1 பரப்புக் காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

076 039 2163

(CS/1701) J-1

## மணமகள் தேவை

வடமத்திய மாகாணத்தில் அமைந்த ஆலயத்தில் உதவி அர்ச்சகராக . கடமையாற்றும் யாழில் 1989 ம் ஆண்டு பிறந்த க.பொ.த சா/த வரை படித்த ஆதிசைவக்குருமார் குலத்தை சேர்ந்தவருக்கு பொருத்தமான மணமகள் தேவை. சைவ போசன மணமகள்களும் கவனத்தில் எடுக்கப்படுவர்.

தொடர்புகளுக்கு:- 077 615 3160

(CS/29045) J-1

## விற்பனைக்கு

- Reception Counter
- Lecture Hall Chair
- Waiting Room Chair (3 Seats)
- Bar Stool
- Wooden Rack
- Examination Beds
- Air Condition
- Partition Sets
- Light Board with Stand

அனைத்தும் நல்ல நிலையில் உள்ளன.
3 மாதங்கள் பாவித்தவை.
இடம்:- கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

070 111 0544

(CS/56543) J-1

## வேலைவாய்ப்பு

அமெரிக்காவில் (லத்தீன்) இலத்திரனியல் பொருட்கள் மற்றும் கையடக்க தொலைபேசி விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு வேலை அனுபவம் உள்ளவர்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (கனேடிய விசா உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்).

தொடர்புகளுக்கு: Whatsapp: 1-758 519 2737

(CS/56509) J-1

## பணியாளர் தேவை


அனுராதபுரத்தில் அமைந்த இந்து ஆலயத்தில் தங்கி நின்று துப்புரவுப் பணிகள் செய்வதற்கு இந்து சமயத்தைச் சேர்ந்த 20 - 55 வயதிற்கு இடைப்பட்ட ஆண் ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:- 077 615 3160

(CS/29045) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 11 . 1944

இறப்பு 26 . 10 . 2024

## M.S.ஸ்ரீறாகுலன்

(விற்பனை முகாமையாளர் - சோதிட விலாச புத்தகசாலை, பெரியகடை, யாழ்ப்பாணம்.)

கொக்குவிலை பிறப்பிடமாகவும் கேணியடி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கை, வசிப்பிடமாகவும் கொண்ட M.S.ஸ்ரீறாகுலன் அவர்கள் நேற்று (26.10.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பாக்கியம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - தங்கமணி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற ரஞ்சனாதேவியின் பாசமிகு கணவரும், ஸ்ரீசுயந்தினி, ஸ்ரீறிஷாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீரதி, ஸ்ரீகாந்தன், ஸ்ரீபத்மினி மற்றும் ஸ்ரீசாளினி, ஸ்ரீறஞ்சினி, ஸ்ரீதயாளன் ஆகியோரின் சகோதரரும், சிவகுமார், செல்வமலர் ஆகியோரின் மாமனாரும், அட்ஷணா, ஆஷிகா, ஆஷிகன், அதிசயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை, பி.ப 1.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
திருமதி சி.ஸ்ரீசுயந்தினி (மகள்)
ஸ்ரீ.ஸ்ரீறிஷாந்தன் (மகன்)

(CS 1711) A-1

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் : 10.07.1938
மறைவு : 24.10.2024

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி பாலவதனி நிகேதன்
அவர்களின் அன்புத் தந்தை
**கனகசபை பாலகிருஸ்ணபிள்ளை**
அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

(cs 563161 (N.J.)

## உடனடி வேலைவாய்ப்பு

பிரபல்யமான கம்பனிக்கு வடமாகாணத்திற்கு முகாமையாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் உடன் தேவை (ஆண்/பெண்).
பகுதி நேர வேலைவாய்ப்பும் உள்ளது

தொடர்பு: 076 112 4145

## விற்பனைக்கு

நாவற்குழியில் 28 பரப்பு, கந்தர் மடத்தில் இரண்டுபரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 077 772 2215

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுக மாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவு செய்யமுடியும் பதிவுக்கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts& Cs apply
WWW.inaipa.com

## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hard ware) நிறுவனங்களுக்கான வேலை வாய்ப்பு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு:
077 077 6469, 077 494 9683

## 38 ஆவது வருட கல்விச் சேவையில்....

யாழ் நகரின் NO:1 கல்வி நிறுவனத்தில்.....

O/L DAY CLASS

**பிரிவு- 2 ஆரம்பம்:- 28.10.2024**

திங்கள்–வெள்ளி வரை 8.00 am–01.15 pm


- ஒவ்வொரு பாட பிரிவிலும் 30 மாணவர்கள் மட்டும் அனுமதி
- ஒவ்வொரு பாட அலகு இறுதியிலும்-அலகுப் பரீட்சை
- பிரிவு-3 வெகு விரைவில்
- யாழ் நகரின் "SUPER GRADE" ஆசிரியர் குழாம்
- அனுமதிகள் இன்று முதல்....

**நாவலர்**
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 459 8440

(CS 1714) P-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 09 . 1939

மறைவு 21 . 10 . 2024

## சுவாமிநாதர் தங்கராஜா

யாழ். உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதர் தங்கராஜா அவர்கள் கடந்த 21.10.2024 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவநாதர் சுவாமிநாதர் - தெய்வானைப்பிள்ளை (உசன்,மிருசுவில்) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை விநாசித்தம்பி - பொன்னம்மா (சாவகச்சேரி) தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதி தங்கராஜா (தேவி) அவர்களின் அன்புக் கணவரும், பரதன், லக்ஸ்மன், ஸ்ரீகணேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், கரோல், சுமதி, ஷர்ணயா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹஷீகா, ஜொனதன், ஆரன், டியா, லோகன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி, ராஜநாதன், சிவபாதசுந்தரம், புவனேஸ்வரி, மற்றும் மகேஸ்வரன் (கனடா), விமலேஸ்வரி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை இலங்கை நேரம் பிற்பகல் 01.30 மணி அளவில் Hendon Cemetery & Crematorium North Chapel London என்னும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம்செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நேரலையை https://shorturl.at/25rK3 என்னும் முகவரியூடாக காணலாம்.

தகவல் :குடும்பத்தினர்
S.Maheswaran - +1(647) 219 4456
பரதன் - +44 7956496244
லக்ஸ்மன் - +44 7956430267
ஸ்ரீகணேஷ் - +44 961206287

(CS/1704) J-1

# மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 09 . 1986

உதிர்வு 22 . 09 . 2024

## ஜெயபாலச்சந்திரன் பிரதீப்

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயபாலச்சந்திரன் பிரதீப் அவர்கள் (22.09.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெயபாலச்சந்திரன்-கிருஷ்ணபவானி தம்பதிகளின் அன்பு மகனும் பிரகாஷ், சட்டத்தரணி ஷாளினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராதிகா, பத்மதனுஷாந்த் (ஆசிரியர் - கிளி/ இராமநாதபுரம் ம.வி) ஆகியோரின் மைத்துனரும் சங்கவி, சயிந்தவி ஆகியோரின் சிறிய தந்தையும் ஹரிஷ்நாத்தின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

4ம் ஒழுங்கை, பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்

தகவல்:
குடும்பத்தினர்.
077 942 0568
077 375 6217

(CS 1702) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர அரசாங்கத்தின் மனநிலையில் மாற்றமில்லை

## சிறீதரன் குற்றச்சாட்டு



**கிளிநொச்சி, ஒக். 27**

**மாற்றத்தை விரும்பிய மக்களின் ஆணையால் இலங்கைத் தீவில் ஆட்சி மாறியிருக்கிறதே தவிர, அதிகாரபீடங்களின் செயல்நோக்கும், மனோநிலையும் சிங்கள வல்லாதிக்கத்தின் வெளிப்பாடாகவே இன்றும் தொடர்கிறது என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

பொதுத்தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சிறீதரன், கிளிநொச்சி கண்ணகிநகர் கிராமத்தில் தமது ஆதரவாளர்களை சந்தித்து கலந்துரையாடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

காலம்காலமாக இந்த நாட்டின் அதிகாரபீடங்களும், கொள்கைவகுப்பாளர்களும் எத்தகையதோர் ஆதிக்க மனோநிலையுள் சிக்குண்டிருந்தார்களோ, அதே மனோநிலையில்தான் அநுர அரசின் நடவடிக்கைகளும் அமைந்திருக்கின்றன.

தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்ட யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர்களான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் ஆகியோர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுபிணையில்விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் கைது கண்டனத்துக்குரியது. அதேபோல், இலங்கையின் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்ட தமிழ்மொழி இதுவரைகாலமும் அரச ஆவணங்களில் இரண்டாம் மொழியாக பிரயோகிக்கப்பட்டுவந்த நிலையில், புதிய கடவுச்சீட்டுகளில் மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளமையும், ஜனாதிபதி செயலகத்தால் அனுப்பப்படும் கடிதங்கள் தனிச்சிங்கள மொழியில் அமைந்திருப்பதும் இந்த நாட்டின் மொழிக்கொள்கையின் தளம்பலையே காட்டுகிறது. இத்தகைய சம்பவங்களும், திட்டமிட்ட நகர்வுகளும் 'இந்தநாட்டில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ளதே தவிர தமிழினத்தின் தலைவிதி ஒருபோதும் மாறப்போவதில்லை' என்ற அபாயச் செய்தியின் அறிவிப்புகளாகவே அமைந்துள்ளன. இத்தகைய யதார்த்தப் புறநிலைகளை புரிந்துகொண்டு, இந்தத் தேர்தல் களத்தில் பெருந்தேசியவாத கட்சிகளை முழுமையாக நிராகரித்து, இனத்தின் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யும் காலக்கடமை எமது மக்களின் கைகளிலேயே உள்ளது - என்றார். (ஒ-26)

# தேசியத்தை நம்பியவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்

## உதயராசா தெரிவிப்பு

வவுனியா, ஒக். 27

தமிழ்த்தேசியத்தை நம்பியவர்கள் ஏமாற்றப்பட்டு தேசியமா அபிவிருத்தியா என்ற இரட்டை நிலைப்பாட்டில் உள்ளதை காணக்கூடியதாக உள்ளது. மாற்றம் ஏற்படுமாக இருந்தால் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதற்கு தயாராக இருப்பதாக சிறிரெலோ கட்சியின் செயலாளரும் ஜனநாயக தேசியக் கூட்டணியின் வேட்பாளருமன ப.உதயராசா தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது, கடந்த ஜனாதிபதித்தேர்தலில் மக்கள் ஒரு மாற்றத்தை உருவாக்கி மூன்றாந்தரப்பை சேர்ந்த ஒருவர் வெற்றி பெற்றுள்ளார். அந்தவகையில் நாட்டில் ஒரு மாற்றத்தை கொண்டுவரவேண்டும் என்ற நோக்கில் எந்தக் கட்சியுடனும் இணைந்து போட்டியிடுவதில்லை என்ற நிலைப்பாட்டில் அவர்கள் உள்ளனர்.

குறிப்பாக ஊழல் அற்ற ஓர் ஆட்சியை உருவாக்கும் நோக்குடன் கடந்த காலங்களில் அரசாங்கத்துடன் செயற்ப்பட்ட அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்தில் இணைக்கமாட்டோம் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த தேர்தலில் சொற்ப வாக்குகளால் நான் தோல்வியடைந்திருந்தேன். அந்தவகையில் இம்முறை நாம் புதிய உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு தேர்தலில் போட்டியிடுகின்றோம். எனவே இந்த நாட்டில் ஒரு மாற்றத்தை அவர் உருவாக்குவாரானால் அவருடன் இணைந்து செயற்படுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். மாறாக மீண்டும் ஒரு நெருக்கடி நிலை நாட்டில் ஏற்படுமாக இருந்தால் அவர்களுக்கு எதிராக குரல்கொடுக்கவும் தயங்கமாட்டோம்-என்றார். (ஒ-110)

# வீதியோரக் கழிவால் பெரும் சுகாதாரச் சீர்கேடு

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை



பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியோரமாக வல்லைப் பகுதியில் தொடர்ச்சியாக கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதனால் சுகாதாரச் சீர்கேடு நிலை உருவாகியுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். புறாப்பொறுக்கி யாழ் பீச் ஹோட்டலிலிருந்து வல்லை இராணுவ முகாம் வரை பிரதான வீதியோரமாக பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் போத்தல்கள், பயன்படுத்தப்பட்ட பம்பஸ்கள் உள்ளிட்ட கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டு வருகின்றன-இவ்வாறு கொட்டப்படும் கழிவுப்பொருள்களை அங்கு நடமாடும் நாய்கள் மற்றும் காகம் உள்ளிட்ட பறவைகளும் சேதப்படுத்திச் செல்கின்றன. வேகமான காற்றினாலும் கழிவுப் பொருள்கள் பிரதான வீதிக்கு அண்மையாக சிதறடிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இதேவேளை, கர்ப்பிணித் தாய்மார் பயன்படுத்தும் காலாவதியான முழுமையான மா பைக்கற்றுகள் வீசப்பட்டுள்ளன. அவை தனி நபர்களினால் வீசப்பட்டதா? அல்லது மருந்தகத் தரப்பினால் வீசப்பட்டதா என்பது உறுதிப்படுத்த முடியாதுள்ளது. இதேபோன்று மேற்படி வீதியில் மருந்தேற்றும் ஊசிகள் உள்ளிட்ட மருத்துவக் கழிவுகளும் முன்னதாக வீசப்பட்டுக் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரதான வீதியின் ஊடாக நாளாந்தம் பயணிக்கும் பெரும் எண்ணிக்கையானவர்களின் நலன்கருதி சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-25, 100)

# ஆங்கிலதின நிகழ்வு

கொடிகாமம், ஒக். 27

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் ஆங்கில தின நிகழ்வு அதிபர் க.உமாபாலன் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.என்.சுதர்சன், சிறப்பு விருந்தினராக முன்னாள் ஆங்கில பாட ஆசிரியர் எம்.ஒப்பிலாமணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-ரி-159)

# மழையால் யாழ்ப்பாணத்தில் 15 குடும்பங்களுக்கு பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாட்களாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக 15 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார். சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-27)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 27


யாழ்ப்பாணம் - அராலி வீதி பொம்மைவெளிப் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலில் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றது. குறித்த நபரிடமிருந்து 7 கிராம் 500மில்லிகிராம் கஞ்சாவை பொலிஸார் மீட்டுள்ளனர். (ச-26,27)

# போலி கசியோ உற்பத்தி கொழும்பில் மீட்பு

கசியோ நிறுவனம் குற்றத்தடுப்பு பிரிவின் உதவியுடன் கொழும்பிலுள்ள இறக்குமதி மொத்த விற்பனையாளர் ஒருவரிடமிருந்து கசியோ நாமத்துடன் உற்பத்தி செய்யப்பட்ட கைக்கடிகாரங்கள், கல்குலேட்டர்கள், கணினிகள் என்பவற்றை மீட்டுள்ளது. இந்த மீட்பு நடவடிக்கையை தொடர்ந்து தரமான கசியோ தயாரிப்புகள் மாணவர்களுக்கு கிடைக்குமென தாங்கள் நம்புவதாக கசியோ நிறுவனத்தின் இலங்கை மற்றும் இந்தியாவுக்கான தலைமை அதிகாரி குர்மீத்சிங் தெரிவித்துள்ளார். கசியோ தயாரிப்புகளை கொள்வனவு செய்யும் போது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம் கொள்வனவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-6)

# யானை உயிரிழப்பு



மன்னார், ஒக். 27

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரப்புக்கடந்தான் கிராமத்தில் சுமார் 15 வயது மதிக்கத்தக்க ஆண் யானை உயிரிழந்த நிலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்த போது குறித்த யானை சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்குண்டு இறந்ததாகவும், சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர். (ஒ-45-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்பிட்டிய சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி

கொழும்பு, ஒக். 28
எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளது.
காலிமாவட்டம் எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் நேற்று இடம்பெற்றது. இதில் அங்கீகரிக்கப்பட்ட 8 அரசியல் கட்சிகள் 1 சுயேச்சை குழு ஆகியன போட்டியிட்டன. நள்ளிரவு ஒரு மணியளவில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் தேசிய மக்கள் சக்தி 17 ஆயிரத்து 295 வாக்குகளுடன் 15 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தி 6 ஆசனங்களையும், பொதுஜன பெரமுன 3 ஆசனங்களையும், பொதுஜன ஐக்கிய முன்னணி 2 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன. (ம)

# தமிழ் மக்கள் கூட்டணியினரை தாக்கியோரைக் கைதுசெய்க!

## சட்டத்தரணி மணிவண்ணன் வலியுறுத்து

தமிழ் மக்கள் கூட்டணியினர் மீது தாக்குதல் நடத்திய அனைவரையும் பொலிஸார் கைதுசெய்து அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் போட்டியிடும் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழ் மக்கள் கூட்டணி இந்த அரசியல் களத்தில் தவிர்க்க முடியாத பெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது. மக்களின் அமோக ஆதரவு பெருகி வருகின்றது. எங்களின் எழுச்சியை பொறுக்க முடியாதவர்கள் எங்கள் மீது தொடர்ச்சியாக அழுத்தங்களை வழங்கி வருகின்றது.
நேற்றையதினம் வெள்ளிக்கிழமை (நேற்றுமுன்தினம்) எமது வேட்பாளர் உள்ளிட்ட இருவரை பருத்தித்துறை பொலிஸார் சட்டவிரோதமாக கைது செய்தனர். இன்று எங்கள் அணியினர் பரப்புரையில் ஈடுபட்டிருந்த வேளை காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர். இதெல்லாமே எமது கட்சியை மாத்திரம் இலக்கு வைத்து நடத்தப்படுகிறது. பெண்கள், ஆண்களை ரவுடி கும்பல்கள் துரத்திதுரத்தி அடிப்பது இந்த சமுதாயத்தில் முன்னர் நடந்திருக்காத மிக மோசமான காட்டுமிராண்டித்தனமாகும். இதற்கு எதிராக நாங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம் - என்றார். (ம-26)



# மரத்திலிருந்து வீழ்ந்தவர் பலி

யாழ்ப்பாணம், ஒக். 27
இரண்டு வாரங்களுக்கு முன்னர் மரத்திலிருந்து தவறி விழுந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பத்தலைவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.
கிளிநொச்சி அறிவியல் நகரில் இயங்கிவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் பணிபுரிந்து வந்த ஆறுமுகம் காளிதாஸ் (வயது-36) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-66)

## நவ. 14...

நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 10 ஆவது சரத்துக்கமைய தேர்தல் திகதி நிர்ணயிக்கப்படவில்லை என்றும், தேர்தல் திகதியை பிற்போடவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுவரும் நிலையிலேயே, தேர்தல் ஓரிரு நாள்கள் பிற்போகச் சாத்தியங்கள் உள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.
நாடாளுமன்றத் தேர்தலுக்கு கடந்த 4 ஆம் திகதி முதல் 11ஆம் திகதிவரை வேட்புமனுக்கள் கோரப்பட்டு ஏற்கப்பட்டிருந்தன. வேட்புமனுக்கள் ஏற்கப்படும் நாளிலிருந்து ஐந்து வாரங்களுக்கு குறையாமலும், ஏழு வாரங்கள் தாண்டாத வகையிலும் தேர்தல் திகதி நிர்ணயிக்கப்பட வேண்டும்.
அரசமைப்பின் இந்த சரத்துக்கு அமைய தேர்தல் திகதியை நவம்பர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 29ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள்ளேயே நிர்ணயித்திருக்க வேண்டும். இதனால், நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதியாக அறிவிக்கப்பட்டுள்ள நவம்பர் 14 ஆம் திகதி சட்ட காலத்துக்குள் இடம்பெறாததால், அன்றைய தினம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது சட்டத்திற்கு முரணானது என நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதையடுத்தே தேர்தல் திகதி பிற்போகும் என்று கருதப்படுகின்றது.
இது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவும் அவதானம் செலுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறானதொருபின்புலத்திலேயேசட்டஆலோசனைக்குப் பிறகு, நாடாளுமன்றத் தேர்தல் திகதி மாற்றப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ம-44)

## நாட்டின்...

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ தலைமையிலான ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவினர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன்போதே நாட்டின் பாதுகாப்பு முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர தூதுவர்களிடம் தெரிவித்துள்ளார்.
இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட வாய்ப்புள்ளதாக அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் அண்மையில் தத்தமது மக்களை எச்சரித்தன. இதனால், ஐரோப்பிய நாடுகளின் சுற்றுலாவிகள் இலங்கைக்கு வருவதற்கு தயக்கமடைவார்கள் என்று கருதப்படும் பின்னணியிலேயே, நாட்டின் பாதுகாப்புக் குறித்த தெளிவூட்டல் ஜனாதிபதி அநுரவால் வழங்கப்பட்டுள்ளது.
ஐரோப்பிய ஒன்றியம் தற்போது இலங்கையின் இரண்டாவது மிகப்பெரும் சந்தையாகக் காணப்படுகின்றது. இந்த நிலையில், எதிர்வரும் காலத்தில் இலங்கைக்கான சந்தையை விரிவுபடுத்தல், தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் போன்ற விடயங்களில் இலங்கைக்கு ஆதரவு வழங்குவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதி அநுரவிடம் தெரிவித்துள்ளனர். (அ-ம)

## அடுத்த...

இரத்தினபுரியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அடுத்த வருடத்துக்குள் மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும், வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்டெடுக்க ஜனாதிபதி, பலமான அமைச்சரவை, நாடாளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கிய பலமான அரச கட்டமைப்பை ஏற்படுத்துவது அவசியம். எனவே எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாகத் தேர்தலை நடத்துவதில் உறுதியாக உள்ளோம் - என்றார். (அ-ம-44)

## நவம்பர்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரையொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நவம்பர் மாதம் 14ஆம் திகதிக்கும் 21ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்துக்குள் 25 பேரைக் கொண்ட தமது அமைச்சரவை அறிவிக்கப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார். (அ-ம-44)

## 'யாழ்தேவி'...

வடக்குப் பாதையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை ஓட்டத்தைத் தொடர்ந்து ரயில்வே இயந்திர சாரதிகள் மற்றும் அதிகாரிகளின் உடன்பாட்டுடன் இந்தச் சேவைகள் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் ரயில்வேதிணைக்களத்தின் பொதுமுகாமையாளர் மேலும் கூறியுள்ளார். (அ-ம)

## ரயில்...

மிருசுவில் பிரதேச மருத்துவமனைக்கு முன்பாக உள்ள ரயில் கடவையில் நேற்று மாலை 4.30 மணியளவில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. ஹைஏஸ் வாகனத்தின் பின்பக்கம் ரயிலுடன் மோதுண்டமையால், உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மயிரிழையில் பலர் உயிர் தப்பியுள்ளனர் என்று விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். கொடிகாமம் பொலிஸார் விபத்துத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-100)

## வீடொன்றின்...

மண்ணெண்ணெய் ஊற்றி எரித்த பின்னர் தப்பிச்சென்றுள்ளனர். இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
கடந்த மாதம் 8ஆம் திகதியும் அந்த வீட்டின் மீது இதேபோன்றதொரு தாக்குதல் நடத்தப்பட்டிருந்த நிலையில், அது தொடர்பிலும் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும், இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## திருநெல்வேலியில்...

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும், பொதுச்சுகாதாரப் பரிசோதகரும் நேற்று டெங்கு ஒழிப்பு களத்தரிசிப்புக்காக மேற்குறித்த பகுதியில் உள்ள வீடுக்குச் சென்ற நிலையில், அந்த முதியவர் சைக்கிளுக்கு மேல் விழுந்த நிலையில் காணப்பட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.
மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மாரடைப்புக் காரணமாகவே குறித்த மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ-ம-27)

## கிணற்றுக்குள்...

கைக்குண்டுகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. அந்தக் கிணறு 35 வருடங்களுக்கும் மேலாக பாவனையற்று இருந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதையடுத்து, நீதிமன்ற அனுமதி பெற்று குறித்த கிணற்றில் மேலும் தேடுதல் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தப் பகுதிக்குப் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ம-100-66)

## குருதித்...

எனவே, குருதிக் கொடையாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவைத் தொடர்புகொண்டு குருதிக்கொடை வழங்க முன்வருமாறு கோரப்பட்டுள்ளது. (அ-ம-66)

## தமிழ்...

ஓட்டோவில் வந்த நால்வர் அடங்கிய குழுவினர், தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டவர்களுடன் முரண்பட்டு அவர்களைத் தாக்கியுள்ளனர். பதிலுக்கு தமிழ் மக்கள் கூட்டணியினரும் வார்த்தை மோதலில் ஈடுபட்டதையடுத்து, திரும்பிச் சென்ற அவர்கள் (ஓட்டோவில் வந்தவர்கள்) 20க்கும் மேற்பட்டோரை சம்பவ இடத்துக்கு அழைத்துவந்து தமிழ் மக்கள் கூட்டணியினர் மீது கொடூரத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.
பெண் ஒருவரின் வயிற்றில் கயிறால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன், தடிகள், பொல்லுகளாலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. மூவர் காயமடைந்த நிலையில் அவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். படுகாயங்களுக்கு உள்ளான பெண் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

குலனை வீதியில் உள்ள
நி.பர 3 குளி 15.5
கல் வீடு விற்பனைக்கு.

தொடர்பு:- 077 779 5404

## வேலையாட்கள் தேவை

பலசரக்கு கடைக்கு அனுபவமுள்ள
வேலையாட்கள் தேவை.

- ஆரம்ப சம்பளம் நாள் ஒன்றிற்கு
  ஆண் - 3000/- - 3500/-
- முன்அனுபவமுள்ள சிட்டை எழுதுநர்
  பெண் - 30000/- - 45000/-
- பொதிசெய்யும் பெண்கள் - 30000/- - 45000/-

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் தேவை.

(CS/56539) J-1

தொடர்புக்கு:- 076 184 4954

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு ஆட்கள் தேவை
கிளிநொச்சி மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கு உணவு. தங்குமிடம் வழங்கப்படும்.

1) விற்பனை பிரதிநிதி :-கிளிநொச்சி. முலைத்தீவு. வவுனியா. மன்னார் (ஆண்)
2) அலுவலக முகாமையாளர்:-கணினி அறிவுடையவர்கள் (ஆண்.பெண்)
3) விற்பனையாளர்கள் :- ஆண்.பெண்
4) கணக்குப் பதிவாளர் :- ஆண்.பெண் (கணினி அறிவுடையவர்கள்)

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு தகுதி வாய்ந்தவர்கள் கீழ் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களிடம் உள்ள தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

1. சுயவிபரக் கோவை
2. குடும்ப பங்கீட்டு அட்டை
3. பிறப்புச் சான்றிதழ்
4. தேசிய அடையாள அட்டை
5. G.S குணநல சான்றிதழ்

(CS 43475) P-1

தொடர்பு: 077 743 5265


# தமிழர் இருப்பை ஒழிப்பதற்கான வரலாற்றுத்தவறை இழைக்காதீர்

## தமிழ் மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக். 27

**தமிழர் அரசியல் பலவீனப்பட்டு அரசியல் அநாதைகளாக தமிழர்கள் கைவிடப்பட்டுள்ள இன்றைய சூழலில், தமிழர்களிடம் தொன்று தொட்டு வரும் ஒற்றுமையின்மைக்குத் தூபம் போடும் ஒரு வரலாற்றுத் தவறுக்கு நாமும் துணைபோகக்கூடாது என்று தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
தமிழரின் விடுதலைப் போராட்டமானது அன்றைய கால தமிழரசியல்வாதிகளின் சுயநல அரசியலின் மீதான கோபத்தின் வெளிப்பாடாகவே ஆயுதப் போராட்டமாக வேகமெடுத்தது. காலச்சக்கரம் சுழன்று ஐம்பது வருடங்கள் கழிந்தும், ஆரம்பித்த அதே இடத்திலேயே தமிழ்ச் சமூகம் மீண்டும் வந்து நிற்பதென்பது எமது இனத்தின் சாபக்கேடே.

கடந்த சில வாரங்களாக, மாதங்களாக தமிழர் அரசியலிலும் சமூகத்திலும் நடைபெறும் பல்வேறு மாற்றங்களையும் சமூக வலைத்தளங்களில் அது தொடர்பாக வருகின்ற பதிவுகளையும் நாம் உன் னிப்பாக அவதானித்து வருகின்றோம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என் பது பலம்பொருந் திய ஆலமரம். ஆனால் இப்போது படிப்படியா பல் வேறு கிளைகளாக உடைந்து தமிழர் அரசியல் பலவீனப்பட்டு அரசியல் அனாதைகளாக தமிழர் கள் கைவிடப்பட்டுள்ளனர்.


இன்றைய சூழலில், தமிழர்களிடம் தொன்றுதொட்டு வரும் ஒற்றுமையின்மைக்கு தூபம் போடும் ஒரு வர லாற்றுத் தவறுக்கு நாமும் துணை போகக்கூ டாது.

இந்த இக்கட்டான சூழலில் யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தையும், அதனோடு தொடர்பு டைய மாணவர்களையும் இந்த அரசியல் சகதிக் குள் சிக்கவைப்பதையும் சுயநல அரசியலின் தற்காப்புப் போர்வையாக பயன்படுத்தப்படுவதை யும் நாம் உரிமையோடு கண்டிக்கின்றோம். உங் களின் அரசியல் கொள்கைகளை மக்களுக்குத் தெளிவாக விளங்கவைப்பதன் மூலம் பெறப்படும் அரசியல் வெற்றி மாத்திரமே உண்மையான வெற் றியாக இருக்கும்.

மக்களே, நீங்கள் யாருக்கு வாக்களிக்கவேண்டும், எந்த அரசியல் கட்சிக்கு ஆதரவு நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்பதும் உங்களின் தனிப்பட்ட முடிவு. உங்கள் வாக்குரிமைக்குள் யாரும் தலையிடு வதோ, மற்றவர்களின் அரசியல் அபிலாஷைகளை உங்களுக்குள் திணிப்பதோ அருவருக்கத்தக்க செயலே. தென்னிலங்கையில் ஏற்பட்டது போல ஓர் அரசியல் மாற்றம் எமது மண்ணிலும் நிகழவேண் டும். அதன்மூலம் எமது மக்களின் அன்றாட பிரச் சினைகளுக்கு ஒரு தீர்வு கிடைக்கவேண்டும். இந்த வரலாற்று அழைப்பிலிருந்து நீங்கள் ஒருபோதும் ஒதுங்கிவிடக்கூடாது என்பதே எமது விருப்பமாகும் - என்றுள்ளது. (ச)

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 04 . 1922



மறைவு 23 . 10 . 2024

### கார்த்திகேசு வேலுப்பிள்ளை (பாண்டியர்)

சிறுப்பிட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் அம்பனை பன்னாலை. தெல்லிப்பளையை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு வேலுப்பிள்ளை கடந்த 23.10.2024 புதன்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பூதப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - குழந்தையப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை, செல்லாச்சிப்பிள்ளை, சின்னத்தம்பி, வள்ளிப்பிள்ளை, சின்னப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பரமேஸ்வரி (சுவிஸ்), கந்தசாமி (சிறுப்பிட்டி மத்தி), சகுந்தலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகநாதன் (சுவிஸ்), சுகந்தினி (சுவிஸ்), ஜெயராயா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், யசிந்தா - செந்தூரன், பரணிதரன் - விது, பகிதரன் - விநூ, சுவேதிகா-கார்த்திக்பாலாஜி, கீர்த்தனா -ஜெகபுரன், லவநீதிகா - நிரோஜன், யோகீசன், காயத்திரி, பிருந்தா, விதுர்ஷா, ஜெதுர்யன், ஜெதுயா ஆகியோரின் அன்புப் பேரனும், அர்சுன், ஆகாஷ், அட்சரா, தீயா, எய்தன், கெசுவின், ஆய்சா, ஏய்தன், ஆதிராஸ்ரீ, ஜெரன், துளசிகன் ஆகியோரின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி கொண்டல் துனுக்கி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பனை, பன்னாலை,
தெல்லிப்பளை.

தகவல்: குடும்பத்தினர்
075 315 6647

(CS/56537) N-1

## சத்துணவு வழங்கல்

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சர்வதேச வறுமை ஒழிப்பு தின சத்துணவு வழங்கல் நிகழ்வு மந்துவில் வடக்கு வள்ளுவன் முன்பள்ளியில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த நன்கொடையாளர் சு. ஜெயரூபனின் அனுசரணையில் நடைபெற்ற நிகழ்வில் 25 மாணவர்களுக்கு இலைக் கஞ்சி வழங்கப்பட்டது. (ச-45-9)


## காணி விற்பனைக்கு உண்டு

- யாழ்ப்பாணம் கைதடியில் 18 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு A9 வீதி முகப்புடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம்
  காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை
- 20 அடி பாதையுடன்

தொடர்புகளுக்கு:
070 168 3354, 070 668 3354

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உரும்பிராய் சிவகுல வீதியில்
14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- உரும்பிராய் சந்தி 300 மீற்றர் தூரம்
- நல்ல சூழல் குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- தரகர் தேவையில்லை
- மருதனார் மடம் உரும்பிராய் செல்லும் காப்பற் வீதி 150 மீற்றர் தூரம்.

தொடர்புகளுக்கு: 077 4683 354
077 2880 152

(CS 1696) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி
## பாராளுமன்ற தேர்தல் - 2024

### வன்னித் தேர்தல் மாவட்டம்



X

1 2 3 4 5 6 7 8 9

## தி.இடபாருடன்

மல்லாவி பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்



எங்கள் வன்னி
எங்கள் மக்களுக்கு

### மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் (V) 1987 கனடாவில் வசிக்கின்ற பட்டய கணக்காளர் (Chartered Accountant) விவாகரத்தான மணமகளிற்கு கனடாவில் வசிக்கின்ற மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**001 437 937 7839, 076 574 4272**

(CS/56525) J-1

### காணி விற்பனைக்கு

கந்தர்மடச் சந்திக்கும் Hindu Ladies College இற்கும் இடையில் 1 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- வீதியில் இருந்து இரண்டாவது காணி
- சுற்று மதில்
- குழாய்க் கிணறு

தொடர்புகளுக்கு:-
**076 772 5781, 075 068 4622**

(CS/72904) J-1

### வீடு வாடகைக்கு

யாழ் நகரை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: **077 562 0694**

(CS/56542) J-1

### வாடகைக்கு

மல்லாகம் நீதிமன்றத்திலிருந்து 500m தூரத்தில் ஸ்ரீமுருகன் களஞ்சியத்திற்கு முன்புறமாக சகல வசதிகளுடன் கூடிய இரண்டு மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. வங்கிகள், நிறுவனங்கள் நடாத்துவதற்கு உகந்தது.

**076 106 3291**

(CS/56532) J-1

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
**V2 Travels**
**0768226244**

### தேவை

- வடக்கு கிழக்கில் முதலீட்டாளர்கள் தேவை.
- 10 வீல் லொறிகள், 6 வீல் லொறிகள் வாடகைக்குத் தேவை.

**077 587 8273**

(CS/56528) J-1

### சமையல் உதவியாளர் தேவை


கொழும்பில் உள்ள உணவகம் ஒன்றிற்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு ஆண் சமையல் உதவியாளர் தேவை.
வயதெல்லை 20 - 28

**077 498 5181**

(CS/56526) J-1


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
15 . 08 . 1934



மறைவு
28 . 09 . 2024

## மேரி யோசவ்ராஜா
(ஓய்வு பெற்ற லிகிதர்)
(யாழ். கரம்பொன்னை பிறப்பிடமாகவும் வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு பலவழிகளிலும் உதவிபுரிந்த நெஞ்சங்களுக்கும், நேரில், தொலைபேசி, சமூக ஊடகங்களூடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியையில் கலந்துகொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

* Stanley (Yogan) 0033 652 428 550 (France)
* Nilanthy 0094 7602 38107 (Colombo)
* Chrishanthy 0044 7780 361 947 (London)

(cs 56393) (N.1)

## பதினாறாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
05 . 03 . 1932



மறைவு
24 . 10 . 2008

மீசாலை
## அமரர் சோமசுந்தரம் கணேசலிங்கம்
B.A, Dip in Edu., M.A
(இளைப்பாறிய கொத்தணி அதிபர்)
திதி: அபரபக்க ஏகாதசி

ஆண்டுகள் பதினாறாகிப் போனாலும்
போகாதே நின் நிழலாடும் நினைவுகள்
பேசியமொழிகள் அடி மனதின் அந்தகாரமாய்
ஏகாந்த தனிமையில் சுரம் வடிக்குதே
எம் விழிநீரும் நிதம் சொரியுதே
உம் கனிவு கொண்ட நிஜங்கள்
இங்கு நிஜமற்றுப் போகவில்லை
நிஜமாகி எமையென்றும் வழிப்படுத்தும்
நாட்கள் நடந்தபடி கடந்துமிங்கு - உம்நினைவுகளை
நெஞ்சத்தில் சுமந்தபடி நாமிங்கு வாழ்ந்திடுவோம்.

**குடும்பத்தினர்**

35/1A, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.
"சிவகிரி", மீசாலை வடக்கு, மீசாலை.
72/27. பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி

(cs 56462) (N.1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.10. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

சஞ்சீவி


Registered as a Newspaper

துக்கத்துள் தூங்கித் துறவின்கண் சேர்கலா
மக்கள் பிணத்த சுடுகாடு – தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலன்கெட்ட
புல்லறி வாளர் வயிறு.

—நாலடியார்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | ஐப்பசி 10 | ஞாயிற்றுக்கிழமை (27.10.2024) | சிகரம் :225

# பொதுத்தேர்தல் ; தமிழர்களுக்கு விஷப்பரீட்சையா?



பொன்வண்ணன்

இன்னும் இரு வாரங்களில் பொதுத்தேர்தல் நடைபெறப்போகிறது. மக்கள் ஒரு தீர்ப்பை வழங்கக் காத்திருக்கிறார்கள். அது இயற்கையின் தீர்ப்பாக இருக்க வாய்ப்பிருப்பதாக பலர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள். ஏனெனில் தேர்தலில் ஏற்கனவே மக்களுக்குத் தெரிந்தவர்களின் முகங்களுக்குப் பின்னால் பல புதுமுகங்கள் களமிறக்கப்பட்டிருக்கின்றன. அவர்களில் பலர் அரசியல் என்ற பாடத்தில் 'அரிவரி' கூடப் படிக்காதவர்கள். அத்தகு அரசியல் ஞானசூனியங்களாகக் காணப்படுபவர்கள் நாடாளுமன்றம் போய் என்ன செய்யப்போகிறார்கள்? என்ற கேள்விகள் ஒரு புறமிருக்க... 'தமிழ் மக்களை இவர்கள் என்ன சோணகிரிகளாகவா எண்ணிக் கொண்டார்கள்?' என்ற குரலும் இடையிடையே கேட்காமலில்லை. மொத்தத்தில் அரசியல் களம் நாறிப்போயிருக்கிறது. சமூகவலைத் தளங்களிலுள்ள காணொலிகளைத் திறந்தால் அதில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ள பல விடயங்கள் இதற்குச் சான்று பகரும்.

சமூகவலைத்தளங்களிலுள்ள வடிவேலு சம்பந்தப்பட்ட 'கொமெடி' காணொலிகளை இப்போது எவரும் பார்ப்பதில்லையாம். மாறாகத் தமிழ் அரசியல் ஆர்வலர்களால் தரவேற்றம் செய்யப்பட்டுள்ள பிரசாரப் பகிர்வுகளையே அதிகம் பார்ப்பதாக ஒரு யூரியூப் விரும்பி சொல்லக் கேட்டோம். அதில்தான் அதிகம் நகைச்சுவை இருப்பதாக அவர் குறிப்பிட்டார். மிகவும் சிரத்தையோடு பார்க்கவேண்டிய தமிழ் அரசியல் என்பது எப்படிப் பகடிக்கிடமாகப் போய்விட்டதென முன்னாள் கிராமசபைத் தலைவர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

முன்பு ஒரு காலம் "குறிப்பிட்ட வியாபார இலச்சினை" பொறித்த பொருட்களைக் கொண்டுவந்தால்தான் வியாபாரம் நடக்கும்என்றிருந்த வட பகுதி மக்களின் இரசனை என்பது, "எதைக் கொண்டு வந்தாலும் விற்கலாம்" என்றவாறு மாறிப்போயிருக்கிறது. தென்பகுதி வியாபாரிகள் துணிந்து இங்கு கொண்டு வந்து கொட்டும் குப்பைகளே அதற்குச் சான்று.

2009 க்கு முன்னர், எமது சமூகம் ஒரு கட்டுக்கோப்போடு வாழ்ந்திருந்தது. காற்றுக் கூட அவர்களின் அனுமதியைக் கேட்டுத்தான் சமூகத்துள் நுழைந்தது. தற்போது நாம் காணும் சமூகம் ,எல்லாத் தளங்களிலும் கட்டுப்பாடுகளை இழந்ததோடு மட்டுமல்லாது சகல வழிகளிலும் "ஈனம்" அவர்களைக் காவு கொண்டுவிட்டது. இதன் பின்னர் அரசியல்வாதிகள், சமூகத்தலைமைகள், சீர்திருத்தவாதிகள் ஆகிய தளங்களில் இருந்து சமூக முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டவர்களில் பலர் எதிரிக்கு விலைபோய் விட்டார்கள். அவர்கள் சமூகத்தை அழிப்பவர்களாகவும், காட்டிக் கொடுப்பவர்களாகவும் தம்மை மாற்றிக் கொண்டதே சமூகச் சீரழிவு ஏற்படக் காரணம் என்று சொல்லலாம். கடந்த கால அரசிடமிருந்து சலுகைகளைப் பெற்று அதன்மூலம் பல கோடிகளைச் சம்பாதித்தவர்கள் என சமூகவலைத் தளங்களில் ஒரு பட்டியல் பகிரப்பட்டுள்ளது. அது பொய்யாக இருக்கலாம் என்று வைத்துக்கொள்வோம் "நெருப்பு இல்லாமல் புகையாது" என்கிறார் ஒரு நெட்டிசன்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ச் சமூகத்தை நிலை நிறுத்துகிறோம் என்று புறப்பட்டவர்களில் பலர் நாடாளுமன்றத் தேர்தலில் மௌனம் சாதிக்கிறார்கள். பலரைக் காணவில்லை. அப்போது நடைபெற்ற சம்பவங்களால்தான் அவர்கள் வாயடைத்துப்போய் நிற்கிறார்கள் என்பது ஒரு கசப்பான உண்மை. தமிழர் ஒற்றுமையைக் காட்டுவதற்கு "இந்தச் சின்னத்துக்கு" வாக்களியுங்கள் என்று சொன்னவர்கள் வாயாலேயே "அந்தச் சின்னத்துக்கு" வாக்களிக்க வேண்டாம் என்று சொல்லுமளவுக்கு நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது பணியாற்றிய பல பொதுநலவாதிகள் மத்தியிலும் பல குழப்பமுண்டு. அவர்களை அறியாமலே அவர்களுக்குள்ளும் விஷமிகள் சிலர் ஊடுருவிவிட்டனரோ என அவர்கள் ஐயப்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட அவலங்களுக்கெல்லாம் யார் பொறுப்பு? "தமிழ்ச் சமூகத்தை வளப்படுத்துகிறோம், நலப்படுத்துகிறோம்" என்று புறப்பட்டவர்கள் அதற்கு முன் சில வீட்டுப் பாடங்களையாவது (Home Work) செய்திருக்கவேண்டும். எமது சமூகத்தின் போக்கை நன்கு விளங்கிக்கொண்டிருக்க வேண்டும். அது பற்றிய முன்னறிவைப் பெற்றிருக்கவேண்டும். தம்மை நியாயப்படுத்துகின்ற கருத்துகளை அடி மட்ட மக்களிடம் கொண்டுசென்று சேர்த்திருக்க வேண்டும். மக்களை விழிப்புணர்வுக்குட்படுத்தி இருக்க வேண்டும். அதனை அவர்கள் செய்யவில்லை.





அப்படிச் செய்யாததற்கு அவர்கள் சொல்லும் காரணம் "கால அவகாசம் போதாது" என்பதே. அது உண்மையாக இருக்கலாம். ஆனால், தலைசிறந்த புத்திஜீவிகள் என மார்தட்டிக்கொள்ளும் நாம் "வருமுன் காப்போம்" என்ற கோட்பாட்டோடு இருந்திருக்கவேண்டும். கடைசிவரை காத்திருக்கவேண்டும் என்பதில்லை. 'இப்படி நடந்தால் அப்படியாகும். அதற்கு இதைப்போன்று எதிர்வினையாற்ற வேண்டும்' என்றதொரு தொலைதூர நோக்குக் கொண்டவர்களாக இருந்திருக்கவேண்டும். வருமுன் காக்கவேண்டும் என்பது எமது ஆரம்பப் பாடசாலைகளில் சொல்லித்தரப்படுகின்ற புத்திமதிகளில் ஒன்று. அப்படி இருந்திருந்தால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இத்தனை சங்கடப்பட வேண்டி இருந்திருக்காது. அபாயச் சங்கை ஊதி மக்களை அவசரப்படுத்தி, சிந்திக்கவிடாது முடிவெடுக்கவேண்டிய தேவையும் இருந்திருக்காது. இலகுவாகப் பல ஆயிரக் கணக்கான வாக்குகளை நாம் மேலதிகமாகப்பெற்றிருக்கலாம் என்பதுவும் ஜனாதிபதித் தேர்தல் பற்றிப் பொதுவாகப் பகிரப்படுகின்ற கருத்து.

சுடலை ஞானம் சபைக்குதவாதென்பது போல, தற்போது அது பற்றிப் பேசிப் பயனில்லை. எதிர்வரும் தேர்தலில் எப்படி நடந்து கொள்ளப் போகிறோம்? எவ்வாறு எதிர்வினையாற்றப் போகிறோம்? என்ற முடிவை எடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் தமிழ் மக்கள் இருப்பது தெரிகிறது.

அவ்வாறு சிந்தித்துச் செயலாற்றாது போனால், தமிழ் மக்கள் தேசியக் கட்சிகளுக்குள் தம்மைத் தொலைத்துக் கொள்ள வாய்ப்பிருப்பதைப் பலர் தமது கருத்தாக முன்வைக்கின்றனர். எமது அரசியல் கட்சிகளின் தான்தோன்றித்தனமான போக்கால் வெறுப்படைந்திருக்கின்ற மக்கள் ஒரு தற்கொலை முயற்சியாகத் தேசியக் கட்சிகளுக்கு வாக்களிக்கக் கூடிய சந்தர்ப்பம் அதிகம் உண்டு. அதற்கு எடுத்துக்காட்டாக, அது தொடர்பான புதிய அலையொன்று அடிக்கத் தொடங்கியிருப்பதைப் பலர் வெளிப்படையாகச் சொல்லியும் இருக்கிறார்கள்.

எனவே மக்களை அவசர அவசரமாக தேசியத்தின்பால் வழிப்படுத்தவும், நெறிப்படுத்தவும் வேண்டிய கட்டாயத்துக்குள் நாம் இருக்கிறோம். தமிழ் மக்கள் நலன் சார்ந்து சிந்திப்பவர்களும், அது சார்ந்த செயற்பாட்டாளர்களும் அதனைத் தமது தலையாய கடமைகளில் ஒன்று எனக் கருதி விரைந்து செயற்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது. அதற்காக எதிர்வரும் தேர்தலை ஒரு சமூக அக்கறையோடு எதிர்நோக்கவேண்டும் என்பது பலரது அபிப்பிராயம். இந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமக்கு நல்ல வழிகாட்டக் கூடியவர்களை மட்டுமல்ல, எமக்கான ஒரு தலைமை

08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
27 ஒக்ரோபர் 2024

# தமிழ்மக்கள் ஏன் பலூன்களின் பின் போகிறார்கள்?

நிலாந்தன்

**தமிழ்மக்கள் தங்களுக்காக, தங்களுக்குரிய நீதிக்காகப் போராட யாராவது வரமாட்டார்களா? தங்களுக்காக தன்னைத் தியாகம் செய்ய யாராவது வரமாட்டார்களா? என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் என்பதுதான் அதற்குரிய முக்கியமான காரணம். அதாவது அதைச் சுருக்கமாகச் சொன்னால், தலைமைத்துவ வெற்றிடம் ஒன்று காணப்படுகிறது என்று பொருள்.**

மருத்துவர் அர்ச்சுனா நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறார். ஒரு விருந்தகத்தில் அவர் உணவருந்திக் கொண்டிருக்கும் பொழுது இன்னொரு கட்சியைச் சேர்ந்த ஒரு பெண் வேட்பாளர் அவருக்கு தன்னுடைய துண்டுப் பிரசுரத்தை விநியோகிக்கின்றார். அந்தக் காட்சியை அர்ச்சுனா வழமைபோல நேரலையில் விடுகிறார். அந்தப் பெண்ணிடம் கேள்வி கேட்கிறார். அந்தப் பெண் ஒரு கட்டத்தில் அவரிடம் இருந்து விலகிச் செல்கிறார். அர்ச்சுனா அந்த வேட்பாளர் வழங்கிய துண்டுப் பிரசுரத்தால் தன் வாயைத் துடைக்கிறார். அதையும் நேரலையில் விடுகிறார்.

ஒரு சக வேட்பாளரை அந்த மருத்துவர் எப்படி நடத்தியிருக்கிறார் என்பது அவருடைய அரசியல் நாகரீகத்தைக் கேள்விக்கு உள்ளாக்கக்கூடியது. ஆனால் சில மாதங்களுக்கு முன் அவர் சாவகச்சேரியில் ஒரு கலகக்காரனாக எழுச்சி பெற்றார். தனக்குக் கிடைத்த பிரபல்யத்தை அவர் மிகவும் திட்டமிட்டு கட்டமைத்தார். யூ டியூப்பர்களின் காலத்தில் அது அவருக்கு மிகவும் இலகுவாக இருந்தது. தனக்கு கிடைத்த பிரபல்யத்தை இப்பொழுது அவர் அரசியலில் எதிர்பார்ப்போடு முதலீடு செய்கிறார். சமூக வலைத்தளங்களால் ஊதிப் பெருப்பிக்கப்பட்ட ஒரு பலூன் அவர். அவருடைய ஊசியே அவரைக் குத்தி வெடிக்கச் செய்துவிடும் என்பதைத்தான் அந்த விருந்தகத்தில் இன்னொரு கட்சியின் பெண் வேட்பாளரை அவர் கையாண்ட விதம் நமக்கு உணர்த்துகின்றதா?

அவருக்குக் கிடைத்த பிரபல்யத்துக்குக் காரணம் என்ன? சாமானியர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் சமூக வலைத்தளங்களா? அல்லது, மருத்துவத் துறைக்குள் காணப்படும் விமர்சனத்திற்குரிய அம்சங்களா? அல்லது அந்த விவகாரங்களை அந்தத் துறை சார்ந்த ஒருவரே வெளியே கொண்டு வந்ததுதான் காரணமா?

இல்லை. இவற்றைவிட ஆழமான ஒரு காரணம் உண்டு. தமிழ்மக்கள் தங்களுக்காக, தங்களுக்குரிய நீதிக்காகப் போராட யாராவது வரமாட்டார்களா? தங்களுக்காக தன்னைத் தியாகம் செய்ய யாராவது வரமாட்டார்களா? என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் என்பதுதான் அதற்குரிய முக்கியமான காரணம். அதாவது அதைச் சுருக்கமாகச் சொன்னால், தலைமைத்துவ வெற்றிடம் ஒன்று காணப்படுகிறது என்று பொருள். அர்ச்சுனாவின் பின்னால் மட்டுமல்ல கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழ் மக்கள் வெவ்வேறு தரப்புகள், கட்டமைப்புகள் போன்றவற்றை நோக்கி அதிகரித்த எதிர்பார்ப்போடு அவற்றின் பின் சென்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த தலைமைத்துவம் அல்லது எதிர்பார்த்த தொடர்ச்சியான காட்சி மாற்றங்கள் நடக்கவில்லை. தமிழ்மக்கள் பேரவை தோன்றிய பொழுது தமிழ்மக்கள் அதிகம் எதிர்பார்ப்போடு அதை நிமிர்ந்து பார்த்தார்கள். இரண்டு எழுக தமிழ்களிலும் கலந்துகொண்ட அனைவருமே தாமாக வந்தவர்கள்தான். யாரும் வாகனம் விட்டு அழைத்து வரவில்லை.

விக்னேஸ்வரன் மாகாணசபையில் சுமந்திரன் அணியினரால் சுற்றிவளைக்கப்பட்ட பொழுது அவருக்குக் கிடைத்த ஆதரவு தன்னியல்பானது. யாரும் திட்டமிட்டு ஒழுங்கமைக்காதது. ஆனால் விக்னேஸ்வரன் தனக்குக் கிடைத்த ஆதரவையும் அபிமானத்தையும் அங்கீகாரத்தையும் தொடர்ந்து தக்கவைக்க முடியாதவராகத் தன்னை நிரூபித்தார். தமிழ் மக்கள் பேரவையின் இயங்கா நிலைக்கு அவரும் ஒரு காரணம்.

மாகாணசபையின் காலம் முடிந்தபொழுது சமூகச் செயற்பாட்டாளராகிய செல்வின் என்னிடம் கேட்டார்... "விக்கி இப்பொழுது என்ன முடிவை எடுக்கவேண்டும்? ஒரு கட்சியை தொடங்கி கட்சி அரசியலை முன்னெடுப்பதா? அல்லது தமிழ் மக்கள் பேரவையை ஒரு மக்கள் இயக்கமாக வளர்த்தெடுத்து அதற்குத் தலைமை தாங்குவாரா?" என்று நான் சொன்னேன்..."அவர் மக்கள் இயக்கத்துக்கு தலைமை தாங்கத் தேவையான வாழ்க்கை ஒழுக்கத்தையோ அல்லது அரசியல் தரிசனத்தையோ கொண்டவர் அல்லர். "அநேகமாக அவர் கட்சியைத் தொடங்கி ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வரக்கூடும்" என்று. விக்கி ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வந்தார். ஆனால் அவர் மாகாண சபைக்குள் சுமந்திரன் அணியினால் சுற்றிவளைக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் அவருக்கு இருந்த கவர்ச்சியும் ஜனவசியமும் இப்பொழுது இல்லை.

தமிழ் மக்கள் பேரவை ஓய்வுக்கு வந்து சில ஆண்டுகளில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணி இடம் பெற்றது. அங்கேயும் தமிழ் மக்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டார்கள். தாமாகத் திரண்டார்கள். அது ஒரு பெரிய எழுச்சி. தூதரகங்களைத் திரும்பிப் பார்க்க வைத்த எழுச்சி. படைத் தரப்பை முகாம்களுக்குள் முடக்க வைத்த ஒரு எழுச்சி. ஆனால் அதுவும் பின்னர் காற்றுப்போன பலூன் ஆகியது. அந்தப் பேரெழுச்சியின் பெயரால் உருவாக்கப்பட்ட அமைப்பு அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிக்குப் போகவில்லை. அந்த அமைப்பின் இணைத் தலைவர்கள் ஆங்காங்கே மக்கள் போராட்டங்களில் காணப்படுகிறார்கள். ஆனாலும் அது ஒரு பேரியக்கமாக வளர்ச்சி பெறவில்லை.

அப்படித்தான் கடந்த மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலையொட்டி தமிழ்ப் பொதுவேட்பாளரை நோக்கி 2 லட்சத்து 26 ஆயிரம் மக்கள் திரண்டார்கள். தமிழ்த்தேசியப் பொதுக் கூட்டமைப்பு என்று அழைக்கப்படுகின்ற, கட்சிகளும் மக்கள் அமைப்பும் இணைந்த ஒரு ஹைபிரிட் கட்டமைப்பை நோக்கி தமிழ்மக்கள் அதிகரித்த எதிர்பார்ப்போடு காணப்பட்டார்கள். ஆனால் சில நாட்களில் வந்த நாடாளுமன்றத் தேர்தலில் பொதுக்கட்டமைப்பு போட்டியிடவில்லை. பொதுக்கட்டமைப்பு தொடர்ந்து வரும் எல்லா தேர்தல்களிலும் கட்சிகளையும் மக்கள் அமைப்புகளையும் ஒன்றிணைக்க வேண்டும் என்று தமிழ்மக்கள் எதிர்பார்த்தார்கள். இப்பொழுதும் எதிர்பார்க்கிறார்கள். திருகோணமலையில் சங்கையும் வீட்டையும் இணைத்தது பொதுச்சபையின் மதத் தலைவர்களில் ஒருவராகிய திருமலை ஆயர்தான்.

எனவே தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பு முயற்சித்து இருந்திருந்தால் மீண்டும் கட்சிகளை ஒருங்கிணைக்கலாம், அதன்மூலம் வாக்குச் சிதறலைத் தடுத்திருக்கலாம் என்று எதிர்பார்ப்பு சங்குக்கு வாக்களித்த மக்கள் மத்தியில் பரவலாக இருந்தது. தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பு முன்கையெடுத்திருந்தால் அரங்கில் இப்பொழுது தோன்றியிருக்கும் பெரும்பாலான சுயேச்சைகள் அந்தக் கட்டமைப்புக்குள் வந்திருக்கும் என்பது உண்மை. கட்சிகளுக்குள் உடைந்து வெளியே வருபவர்கள் பொதுக்கட்டமைப்பை நோக்கி வந்திருப்பார்கள். ஆனால் அது நடக்கவில்லை. பொதுக் கட்டமைப்பு இப்பொழுது நடைமுறையில் இல்லை. பொதுக்கட்டமைப்புக்குள் காணப்பட்ட மக்கள் அமைப்பு நாடாளுமன்றத் தேர்தலைக் கையாள்வதில்லை என்று முடிவெடுத்தது. இதனால் சங்குக்கு வாக்களித்த மக்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை.

இப்படியாக தமிழ் மக்கள் காலத்துக்குக் காலம் வெவ்வேறு அமைப்புகளின் மீதும் நபர்களின் மீதும் தங்கள் நம்பிக்கைகளை முதலீடு செய்கிறார்கள். எதிர்பார்ப்போடு பார்க்கின்றார்கள். யாராவது வந்து மீட்க மாட்டார்களா? எந்தக் கட்டமைப்பாவது ஒரு காட்சி மாற்றத்தை ஏற்படுத்தாதா? என்று எதிர்பார்ப்போடு அந்த அமைப்பின் பின் அல்லது நபர்களின் பின் செல்கிறார்கள். முடிவில் உற்சாகமெல்லாம் வடிந்து போய்ச் சலித்து அரசியலில் ஆர்வமற்று ஒதுங்கி விடுகிறார்கள்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலிலும் அவ்வாறு தமிழ் மக்கள் சலிப்போடு ஒதுங்கி நிற்கும் ஒரு நிலைமை தோன்றக்கூடும் என்ற பயம் பரவலாக உண்டு. சில கிழமைகளுக்கு முன்பு ஜனாதிபதித் தேர்தலில், தேசமாகத் திரள்வோம் என்று நின்ற மக்கள், இப்பொழுது விருப்பு வாக்குக் கேட்டுத் தமிழர்களை வாக்காளர்களாகக் கூறுபோடும் கட்சிகளையும் சுயேச்சைகளையும் சலிப்போடும் ஏமாற்றத்தோடும் விரக்தியோடும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.


இந்த விரக்தி சிலசமயம் அநுர அலையின் பின் மக்களை உந்தித் தள்ளிவிடுமா என்ற பயம் தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் உண்டு. இதே நிலைமை திருகோணமலையிலோ அம்பாறையிலோ ஏற்பட்டால் என்ன நடக்கும்? புலம்பெயர்ந்து வாழும் திருகோணமலையைச் சேர்ந்த ஒரு தமிழ் அரசியல் செயற்பாட்டாளர் சொன்னார், திருகோணமலையில் எவ்வளவுதான் வாக்குகள் சிதறினாலும் ஒரு தமிழ்ப்பிரதிநிதித்துவம் தேவை என்பதற்காக இனமாகச் சிந்தித்து வாக்களிக்கும் ஒரு பாரம்பரியம் அங்குண்டு. அது இனியும் தொடரும் என்று. தொடர்ந்தால் நல்லது. அம்பாறையிலும் அப்படி நடந்தால் நல்லது. வடக்கில், மீன் கரைந்தாலும் சட்டிக்குள்தான் இருக்கும் என்று நம்புவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்குச் சின்னத்தை நாம் திருடவில்லை;

# தவறானவர்களின் கைகளில் சிக்காமல் காப்பாற்றியிருக்கிறோம்



## - சுரேஷ் பிரேமச்சந்திரன்

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் சங்குச் சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளரான **சுரேஷ் பிரேமச்சந்திரன்** உதயன் சஞ்சீவிக்கு வழங்கி பிரத்தியேக நேர்காணல் இது.

**கே: இம்முறை நாடாளுமன்றத் தேர்தல் களம் மிகவும் வித்தியாசமானதாக உள்ளது. கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து போட்டியிட்டவர்கள் இம்முறை எதிரெதிர் நிலைகளில் தனித்தும், கூட்டாகவும் போட்டியிடுகின்றீர்கள். மாற்றத்தை எதிர்பார்க்கும் இப்போதைய சூழலில் உங்கள் கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு இருப்பதாகக் கருதுகின்றீர்களா?**

ப: தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக நாங்கள் செயற்பட்ட காலத்தில் எம் மீது மக்கள் ஒரு நம்பிக்கை வைத்து கூட்டமைப்புக்கு வாக்கினை அளித்திருந்தார்கள். மிகப் பெருமளவான நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். ஆனால் அதற்குப் பிற்பாடு கூட்டமைப்பில் உள்ள பல்வேறுபட்ட காரணிகளால் பலர் வெளியேற வேண்டி இருந்தது. முதலாவதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார். அதேபோன்று நாங்களும் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டோம். இறுதியாக ரெலோ, புளொட் கட்சியினரும் வெளியேறினார்கள்.

இறுதியாகத் தமிழரசுக் கட்சி மாத்திரமே மிஞ்சி இருந்தது பின்னர் தமிழரசுக் க்ட்சிக்குள்ளும் பல பிரச்சினைகள் உருவாகின. அது ஒரு தனி மனிதக் கட்சியாக - சுமந்திரன் தான் எல்லாவற்றையும் தீர்மானிப்பவராகவும், திணிப்பவராகவும் மாறினார். அதனால் தமிழரசுக் கட்சி சிதைந்து சின்னாபின்னமாகிப் போக ஒரு சிலர் தழிழரசுக் கட்சியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்றார்கள். அதில் உள்ள பல முக்கியஸ்தர் பிரிந்து சென்று ஒரு சுயேச்சைக்குழுவாக மாம்பழச் சின்னத்தில் போட்டியிடுகின்றார்கள். இந்தநிலையில் எமது ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியே தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒருங்கிணைவான, பலமான சக்தியாக இருக்கின்றது. ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த்தேசியக் கட்சிகள் ஆகிய தமிழ்த்தேசியத்தையும், மக்களின் உரிமையையும் நிலைநாட்ட வேண்டும் என்ற வேட்கையுடைய கட்சிகள் இந்தக்கூட்டணியில் சங்கமித்து, சங்குச் சின்னத்தில் நாங்கள் போட்டியிடுகின்றோம். தமிழரசுக்கட்சியை சுமந்திரன் சிதைத்தை. அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்களால் கூட தடுக்கமுடியவில்லை. இப்போது தமிழ் மக்களின் ஒரே தெரிவாகவும், நம்பிக்கையாகவும் எமது ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியே உள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக மக்கள் எம்மையே பார்க்கிறார்கள். அந்த நம்பிக்கையை நாம் பொய்யாக்கமாட்டோம். வடக்கு, கிழக்கில் எமது கூட்டணியே மக்களின் அமோக ஆதரவைப் பெற்று அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் என நம்புகிறோம்.

**கே: அப்படியென்ன சாதக அம்சங்கள் உங்களுக்கு உள்ளன? அதிக ஆசனங்கள் என்றால் அண்ணளவாக எத்தனை?**

ப: இந்தத் தேர்தல் களத்தில் எமக்குச் சாதகமான அம்சங்களே அதிகமுள்ளன. குறிப்பாக உட்கட்சிப் பூசல்களாலும், சுமந்திரன் என்ற தனி நபராலும் தமிழரசுக்கட்சி மிகமோசமான நிலைக்குச் சென்றுவிட்டது. அதனால் மக்கள் அந்தக் கட்சி மீது வைத்திருந்த ஒட்டுமொத்த நம்பிக்கையையும் இழந்துவிட்டார்கள், அதைவிட சுமந்திரனைத் தோற்கடித்து, அவரை அரசியலில் இருந்தே ஒதுங்கச் செய்யவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. இந்த எதிர்ப்பும்,வெறுப்பும் தமிழரசுக்கட்சியால் இம்முறை யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் ஒரு ஆசனத்தையாவது கைப்பற்றுமா என்ற சந்தேகத்தை எழுப்பியிருக்கிறது. ஏனைய மாவட்டங்களிலும் அந்தக் கட்சிக்கான வாக்குகளின் எண்ணிக்கை பெரும் சரிவையே சந்திக்கும்.

இந்தநிலையில் தமிழ் மக்கள் தமது உரிமை அரசியலுக்கான தெரிவாக எமது ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியைப் பார்க்கின்றனர்.

அத்தோடு சங்குச் சின்னமென்பதும் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சின்னமாக உள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சங்குச் சின்னத்தில் போட்டியிட்ட பொது வேட்பாளருக்கு 2 லட்சத்து 26 ஆயிரம் வாக்குகள் கிடைத்திருந்தன. பொதுவேட்பாளரின் சங்குச் சின்னத்துக்காக எமது கூட்டணி பலமாக உழைத்ததன் பலனே இந்த வாக்குகள். அந்த உழைப்பு ஜனாதிபதித் தேர்தலோடு தேங்கி நிற்காமல் தொடர்ச்சியான இயங்குநிலையைக் கொண்டிருக்கவேண்டும் என்பதற்காக, அதே சின்னத்தில், அதே கொள்கையுடன், அதே கட்சிகள் கொண்ட கூட்டணியாகக் களமிறங்கியுள்ளோம். தமிழ்மக்களை ஒன்று திரட்டி, இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கி முன்னகர்வதே எமது நோக்கம். இந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் குறைந்த பட்சம் பத்துக்கும் மேற்பட்ட ஆசனங்களை எமது கூட்டணி பெற்றுக் கொள்ளுமென எதிர்பார்க்கின்றோம். ஏனெனில் அந்தளவுக்கு மக்களின் ஆதரவை வெளிப்படையாக நாம் பிரசாரத்துக்காகச் செல்லும் போது அவதானிக்க முடிகின்றது.

**கே: கிழக்கில் தமிழர் பிரதிநிதித்துவம் பறிபோகக்கூடிய மாவட்டங்களாகக் கருதப்படும் திருகோணமலை, அம்பாறை ஆகிய இடங்களில் தமிழ்த்தேசியம் சார்ந்த கட்சிகள் ஒன்றிணைந்து ஒரேசின்னத்தில் போட்டியிடுவது பற்றி முதலில் பேசப்பட்டது. ஆனால் திருகோணமலையில் மட்டுமே இந்த முயற்சி சாத்தியமாகியுள்ளது. அம்பாறையில் ஒரே சின்னத்தில் போட்டியிடும் முடிவு பிசுபிசுத்தது ஏன்?**

ப: திருகோணமலை ,அம்பாறை ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தலா ஒரு ஆசனத்தையே பெற்றுக் கொள்ளக்கூடிய சூழ்நிலைதான் இருக்கின்றது. எனவே அந்த ஒரு ஆசனத்தையும் நாம் பிரிந்து நிற்பதால் இழந்துவிடக் கூடாது என்பதில் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி மிகக் கவனமாக இருந்தது. அந்த வகையில் தமிழ் மக்களின் தலைநகரமாகக் கருதக்கூடிய திருகோணமலையில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். ஆகவே நாங்கள் தமிழரசுக்கட்சியுடன் பேசி ஒரு புரிந்துணர்வுக்கு வந்து, திருகோணமலையில் வீட்டுச் சின்னத்திலும், அம்பாறையில் சங்குச் சின்னத்திலும் இருதரப்பும் இணைந்து போட்டியிடுவதாகத் தீர்மானித்தோம். அதனைத் தமிழரசுக் கட்சியினரும் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் பின்னர் சுமந்திரனும், அவரால் நியமிக்கப்பட்ட வேட்பாளர் தெரிவுக்குழுவும் இதனை நிராகரித்து, திருகோணமலையில் மட்டும் வீட்டுச் சின்னத்தில் இணைந்து போட்டியிடலாம் என்றும், அம்பாறையில் தாம் தனித்துப் போட்டியிடப் போவதாகவும் முடிவெடுத்தார்கள்.

**கே: அப்படியானால் ஒரு ஆசனத்தைப் பெறுவதற்காக, திருகோணமலையில் மட்டும் கூட்டுச் சேர்ந்த நீங்கள், உங்கள் சுயநலத்துக்காகத்தான் ஏனைய மாவட்டங்களில் பிரிந்து, எதிரெதிர் நிலைகளில் நின்று போட்டியிடுகிறீர்களா?**

ப: இதில் எமது சுயநலம் எதுவுமில்லை.

வீட்டுச்சின்னத்தைக் கைப்பற்றி வைத்திருப்பவர்களின் நோக்கம் என்னவென்றால், வடக்கு, கிழக்கில் உள்ள சகல மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிட்டு தங்களது வாக்குகளை உயர்த்திக் கொள்வதின் மூலம் ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பெறுவது தான். அதனாலேயே அம்பாறையில் தமிழர்களின் பிரதிநித்துவம் பறிபோனாலும் பரவாயில்லை, தமது கட்சியின் தேசியப்பட்டியலுக்கு வாக்குகளைப் பெறும் முடிவை எடுத்தார்கள். இந்த முடிவு முட்டாள்தனமானது மட்டுமல்ல கண்டிக்கத்தக்கதும் கூட. எனவே அவர்கள் தான் தமிழர் பிரதிநித்துவத்தைக் காக்க எடுத்த புரிந்துணர்வை மீறினார்கள், நாமல்ல.


நாம் எமது கூட்டணிக்கு வருமாறு தமிழரசுக்கட்சிக்கும்,அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கும் அழைப்பு விடுத்திருந்தோம். ஆனால் தாம் மட்டுமே ஒரேயொரு தமிழ்த்தேசியக் கட்சி எனவும், ஏனைய கட்சிகள் அவ்வாறில்லை என்ற கொள்கையில் இருப்பதால் இந்தக் கூட்டணியில் இணையவர்வில்லை. ஆனால் அவர்களின் கொள்கை உண்மையானதா என்பது வேறுகதை. அதனால் அவர்கள் எங்கள் கூட்டணிக்குள் வரவில்லை.

ஆனால் தன் பெயரிலேயே சமஷ்டியைக் கொண்டுள்ள தமிழரசுக்கட்சி,அந்தச் சமஷ்டியைப் பெற்றுக்கொடுப்பதற்காகவேனும் ஏனைய கட்சிகளோடு இணைந்து தமிழ் மக்களுக்காகப் பணிபுரியத்தயாராகவில்லை. அவர்களுக்கு தங்கள் சுயநலமே முக்கியம். சுமந்திரனின் நோக்கமேதமிழ்த் தேசியக்கூட்டமைப்பைச்

08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் ஆரம்பகால நினைவுகள்



மாணிக்கம் நடராஜசுந்தரம்
ஓய்வுநிலைப் பேராசிரியர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பொன் விழாவைக் கொண்டாடும் சமகாலத்தில், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் தனது 25 ஆவது வருட நிறைவில் வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது. வெள்ளி விழா நிகழ்வுகள் ஒக்ரோபர் 26 ஆம் திகதி சனிக்கிழமை முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மண்டபத்தில் நடைபெற்றது. அதனையொட்டி பீடத்தின் முதலாவது பீடாதிபதியும், ஓய்வுநிலைப் பேராசிரியருமான மா. நடராஜசுந்தரம் எழுதிய வரலாற்றுப் பார்வை இது.

1974ஆம் ஆண்டு ஆடி மாதம் 25ஆம் திகதி வியாழக்கிழமை வெளியிடப்பட்ட 121/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியாகிய பிரகடனத்தின் மூலம் 1974 ஓகஸ்ட் மாதம் முதலாம் நாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஒரு வளாகமாக நிறுவப்பட்டது. பல்கலைக்கழக வளாகம் 1974ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 06ஆந் திகதி அப்போதைய பிரதமரான திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்காவினால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் கே. கைலாசபதி வளாகத்தின் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்டார். இலங்கையின் வடபகுதியில் ஒரு பல்கலைக்கழக வளாகம் நிறுவப்பட்டமை ஒரு வகையில் இலங்கைத் தமிழரின் ஒரு நீண்டகாலக் கல்வித் தேவையையும் இலட்சியத்தினையும் நிறைவு செய்வதாகக் காணப்பட்டது.

**வளர்ச்சிப்பாதையில்...**

சட்டபீடம், உடற்கல்வி பீடம் இரண்டையும் நிறுவுவதற்கு வர்த்தமானி அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் ஆரம்பத்தில் விஞ்ஞான பீடம், மனித பண்பியற் பீடம் ஆகிய இரு பீடங்கள் மட்டுமே செயற்படலாயின. தேவையான நிர்வாக அலுவலகங்களும் மனித பண்பியற் பீடமும், அமரர் சேர் பொன். இராமநாதனால் ஸ்தாபிக்கப்பட்ட முதன்மையான இந்துக் கல்வி நிறுவனமாகிய பரமேஸ்வராக் கல்லூரி வளவில் அமைந்தன. வளாகத்தின் மத்திய நிலையமாக இது விளங்கியது. விஞ்ஞான பீடம் அமெரிக்க சமயப்பணி அமைப்புக்களால் 1821இல் நிறுவப்பட்ட முதன்மையான கிறிஸ்தவக் கல்வி நிறுவனமாகிய யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரி மாணவர் பிரிவுக்கான வளாகத்தில் அமைந்தது. விஞ்ஞான பீடம் 1978 ஆனி மாதம் திருநெல்வேலி வளாகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

மருத்துவ பீடம் 1978 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கைதடியிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடங்களில் தற்காலிகமாக இடம்பெற்றிருந்த மருத்துவ பீடம் திருநெல்வேலியிலுள்ள பிரதான வளாகத்துக்கு வடக்கே ஒரு கிலோமீற்றர் தொலைவிலமைந்த புதிய கட்டடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதன் விளைவாக உயர்கல்வி நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் 1979 தைமாதம் 1 ஆம் நாள் தன்னாதிக்கமுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாற்றமடைந்தது. காலஞ்சென்ற பேராசிரியர் சு. வித்தியானந்தன் தன்னாதிக்கமுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். பல்கலைக்கழகத்தில் அப்பொழுது மருத்துவம், விஞ்ஞானம், கலை மற்றும் விவசாயம் ஆகிய வற்றுக்கான நான்கு பீடங்கள் இருந்தன. இவற்றில் விவசாய பீடம் கிளிநொச்சியில் அமைந்திருந்தது. எந்திரவியற் பீடத்தை நிறுவுவதற்கு கொள்கையளவில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரமும் கிடைத்திருந்தது. ஆனால் தொடர்ந்து வந்த பல்வேறு பிரச்சினைகளால் செயற்பாட்டைத் தொடர முடியாமல் போய்விட்டது. மருதனார்மடத்தில் அமைந்துள்ள நுண்கலைக்கழகம் (இராமநாதன் நுண்கலைக்கழகம்) கைதடியில் அமைந்துள்ள சித்த மருத்துவத்துறை என்பவற்றையும் இணைத்து முழுவளர்ச்சி பெற்ற நிறுவனங்களாக தரமுயர்த்த எடுத்த முயற்சிகள் வெற்றியளித்து இன்று அவை தனித்தனி பீடங்களாக மிளிர்கின்றன. 1983ஆம் ஆண்டு ஏற்




பட்ட இனக்கலவரத்தை அடுத்து கொழும்பில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி மூலம் கற்பிக்கப்பட்ட வர்த்தகத்துறை மூடப்பட்டு யாழ் பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்பட்டு கலைப்பீடத்தின் கீழ் ஒரு துறையாக இருந்தது. பின்னர் காலப்போக்கில் முகாமைத்துவக் கற்கைநெறியும் மானிய ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தக முகாமைத்துவக் கற்கைகள் துறையாக பெயர் மாற்றம்செய்யப்பட்டு கலைப்பீடத்தின் கீழ் தொடர்ந்து இயங்கியது. பேராசிரியர் சிவநாதன், பேராசிரியர் நித்தியானந்தன், பேராசிரியர் பாலகிருஸ்ணன் ஆகியோர் துறைத் தலைவர்களாகக் கடமையாற்றினார்கள். மீண்டும் பேராசிரியர் பாக்கிருஸ்ணன்; பெப்ரவரி 14, 1991 இலிருந்து மூன்று வருடங்களுக்கு முகாமைத்துவக் கற்கைகள் துறைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். கலைப்பீடத்தின் பொருளியல்துறை மண்டபத்திலிருந்து, பல்கலைக்கழக பிரதான கட்டடத்திற்கு மாற்றப்பட்டோம். இருபக்கமும் நடைபாதையும் நான்கு பெரிய வகுப்பறைகளுடன் எங்கள் துறை ஆரம்பமானது. ஆனாலும் கலைப்பீடத்தின் கீழ் தான் செயற்பட்டு வந்தோம். 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட மோசமான உள்நாட்டுப் பிரச்சினைகளால், சுன்னாகத்திலிருந்த மின்பிறப்பாக்கி குண்டுவீசித் தகர்க்கப்பட்டது. யாழ். நகரம் முற்றாக இருளில் மூழ்கியது. பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் சீர்குலைந்தன. போக்குவரத்துகள் ஸ்தம்பிதம் அடைந்தன. துவிச்சக்கரவண்டி தான் ஏமக்கு போக்குவரத்துச் சாதனமாக அமைந்தது. எந்தநேரம் என்னநடக்குமு?, எங்கு ஷெல் வந்து விழும்? என்ற பயத்துடன் எல்லோரும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இலங்கைப் போக்குவரத்துச்சபை முற்றாகவே செயலிழந்திருந்தது. பாடசாலைக் கல்வியும், பல்கலைக்கழகக் கல்வியும் புறக்கணிக்கப்பட்டால் எமது பிரதேசம் சூனியப் பிரதேசமாக மாறலாமென்பது எமக்கு நன்றாகத் தெரியும். இருந்தும் பல்வேறு இடர்கள் மத்தியிலும் நாம் கல்வியையும், பல்கலைக்கழக விளையாட்டுக்களையும் தொடர்ந்து நடத்தினோம்.

1991ஆம் ஆண்டு தொடக்கம் 1996ஆம் ஆண்டு வரை நானும் அமரர் பேராசிரியர் கணேசலிங்கம், அமரர் பேராசிரியர் துரைராஜா மற்றும் வங்கிகளில் தொழில் புரிபவர்கள் சிலரும் திங்கட்கிழமை காலை 4.30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து பயணமாகுவோம். நாம் 5.30 மணிக்கு வல்லைவெளியைக் கடந்து விடுவோம். 6.30 மணிக்கு நான் பல்கலைக்கழகத்திற்கு வந்து, 8 மணிக்கு விரிவுரைகளை ஆரம்பிப்பேன். விரிவுரைகள் பெரும்பாலும் எல்லோருடைய உதவியுடன், தமிழிலும் ஒரு சிலருக்கு ஆங்கிலமொழியிலும் நடைபெறும். மாணவர்களும் சிறப்பாகக் கற்றார்கள். எந்தக் கால கட்டத்திலும் துப்பாக்கியை ஏந்திய ஒருவரும் பல்கலைக்கழகத்தினுள் வரவில்லை, எந்தவிதமான சுவரொட்டிகளும் ஒட்டப்படவில்லை, கல்வியை ஊக்கமளித்தார்களே தவிர, தடையேற்படுத்தவில்லை. அண்மைக்காலங்களில் இலங்கை அரசாங்கத்திலுள்ள கல்வியமைச்சர் இதனையொரு உதாரணமாகக் கொண்டு உரையாற்றியிருந்தார். மண்ணெண்ணெய், அரிசி, துவிச்சக்கரவண்டி யாவும் நியாயமான விலையில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. அந்தக் காலகட்டத்தில் கல்விசாரா ஊழியர் சங்கத்தின் தலைவராகவிருந்த தனேந்திரன் ஆற்றிய சேவைகளை மறக்க முடியாது. அவருடைய முயற்சியால் தான் அருமையான பொருட்கள் எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதாகவிருந்தது. நான் வர்த்தகமும் முகாமைத்துவமும் துறையின் தலைவராக 1993ஆம் ஆண்டு பொறுப்பேற்றேன்.

1991/1995 காலப்பகுதியில் துவிச்சக்கரவண்டியில் 60 கிலோமீற்றர் ஒவ்வொரு நாளும் ஓடியிருக்கின்றேனென்றால் இந்தக் காலத்தவர்கள் நம்பமாட்டார்கள். திங்கட்கிழமை வந்தால் வியாழக்கிழமை திரும்பிச் செல்வோம். எல்லா வீடுகளிலும் மண்ணெண்ணெய் விளக்குகள்தான் எரியும். அதன் வெளிச்சத்தில்தான் வீடுகளில் இரவில் சிறுவர்கள் கல்விசார் விடயங்களை மேற்கொள்வார்கள். அப்போதைய துணைவேந்தர் காலஞ்சென்ற பேராசிரியர் துரைராஜாவின் முயற்சியால் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு இரவு நேரத்தில் 10 மணிவரை மின்பிறப்பாக்கி மூலம் மின்சார வெளிச்ச வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழக மாணவர்கள் இதன்மூலம் மிகவும் நன்மை பெற்றிருந்தனர். இதற்குப் பொறுப்பாக மாணவர் நலன்கருதி நானும் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜாவும் செயற்பட்டோம். ஒன்றாகச் செயற்பட்டு வந்த வர்த்தகமும் முகாமைத்துவக் கற்கைகள் துறையும் தனித்தனித் துறைகளாகப் பிரிக்கப்பட்டன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் தமிழறிஞர்:

## க. உமாமகேசுவரம்பிள்ளை
## (05.05.1934 - 20.04.2024)

13

# நாட்குறிப்புகள்! கடிதங்கள்!

O பா.துவாரகன்

**வான் கலந்த பண்டிதர் உமாமகேசுவரம்பிள்ளைக்கு ஒரு முடங்கல்:**

பண்டிதர் உமாமகேசுவரனது மறைவுக்கு, திரு. செ.சிறீக்கந்தராசா அவர்கள் அனுப்பிய அஞ்சலிக் கடிதம் மேற்குறிப்பிட்ட தலைப்புடன் மின்னஞ்சலில் திரு. ஜெகதீஸ்வரம்பிள்ளை வழியாக வந்தது. சிறீக்கந்தராசா இரு மொழிப் புலமையாளார்; கவிஞர்; வழக்கறிஞர்; இலண்டனில் வசிக்கின்றார்.

**சிறீக்கந்தராசாவின் முடங்கலில் இருந்து முத்துக்கள் சில:**

*நிலையில் திரியாது நிமிர்ந்து நின்று*
*இன்று வானத்து வித்தகர்க்கு*
*விருந்தாகி நிற்கும்*
*பண்டிதப் பெருமகனார்க்கு என்*
*பணிவான வணக்கம்!*

இந்த முடங்கல் விரைவில் உங்களை வந்தடையும் என்று நம்புகிறேன். நீங்கள் வித்தகர்க்கு விருந்தாகிவிட்டீர்கள்.

நம்மோடு நீங்கள் வாழ்ந்த காலத்தில் எனக்கு அவ்வப்போது ஏற்படும் இலக்கண, இலக்கிய ஐயங்களைப் போக்கியவர் நீங்கள். நீங்கள் நம்மை நீத்ததன் பின்னர் முட்டறுக்கவல்ல வல்லார் யாருமின்றி நான் அலமருகின்றேன்.

எனக்கும் உங்களுக்கும் இடையில் இன்று மலர்ந்திருக்கும் உறவுகூட இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் இலண்டனில் ஒரு முறுகலோடுதான் தொடங்கியது. நீங்கள் எழுதிய 'அதிதீரன்' என்ற நூல் வெளியீட்டின்போது, அந்த நூலினை ஆயும் பொறுப்பினை "உந்தக் கொம்பன் ஆர்?" என்று நீங்கள் குறிப்பிட்ட எனக்குத் தந்தீர்கள். அதன் பின்னர், 'சிறீக்கந்தராசா' என்று ஏன் எழுதினீர்கள்? 'சிறீஸ்கந்தராசா' என்று வைத்திருக்கலாமே!' என்றும் கண்டித்தீர்கள்.

அதன் பின்னர் ஏறத்தாழப் பத்தாண்டின் முன்னர் நான் எழுதிய 'இனிக்காதா இலக்கணம்?' என்ற நூலில் நான் எழுதிய 'கோடாலியா - கோடரியா' என்ற கட்டுரை தொடர்பிலும் நம்மிருவருக்கும் இடையிலான முரண்கள் தொடர்ந்தன. இருந்தாலும் முறுகல்கள் அனைத்தும் நிறைவாகவே மொட்ட விழ்ந்தன.

இப்போதும் ஒரு முட்டினை அறுப்பதற்காகவே உங்களுக்கு எழுதுகிறேன். அந்த முட்டும் நீங்கள் ஏலவே சம்பந்தப்பட்ட ஒரு விடயம் பற்றியதுதான். இம்பர் உலகத்தைப் போலல்லாமல், நீங்கள் வாழும் உம்பர் உலகத்தில் இலக்கண, இலக்கிய வித்தகர்கள் பலர் உங்கள் சூழலில் இருப்பதால், நான் கூறப் போகும் முட்டினை அறுப்பது உங்களுக்கு இலகுவாக இருக்கும் என்று நம்புகிறேன்........

**இவ்வாறு விண்ணுலகில் இருக்கும் உமாமகேசுவரனுக்கு தனது ஆதங்கத்தை அனுப்பிய சிறீக்கந்தராசா தனது திருமுகத்தைப் பின்வருமாறு நிறைவு செய்கிறார்:**

பரிமேலழகர் காட்டிய இராமனின் ஊராண்மை, சேக்கிழார் காட்டிய ஏனாதியின் ஊராண்மைக்கு நிகராகாது என்று கண்டறிந்து, அதனை உலகுக்குணர்த்திய உங்களின் நுண்மான் நுழை புலத்தை விஞ்சுவார் யார்? 'அதிதீரன்' என்ற புத்தகத்தில் நீங்கள் எழுதியிருக்கின்ற 'இராமன் புறமுதுகிட்டானா?' என்ற கட்டுரை, காமம் செப்பாது கண்டது மொழிகின்ற உங்களின் நடுநிலைப் பண்பை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்ற கட்டுரை.

உங்கள் மேதாவிலாசத்தையும், நான் அதனை நயக்கின்ற பாங்கையும் உங்களுக்கு மீண்டும் மீண்டும் சொல்லவேண்டும் என்று ஆசை. ஆனால் என்னுடைய நீண்ட முடங்கல் உங்களுடைய பொறுமையைச் சோதிக்கக்கூடாது என்பதால் இவ்வளவில் நிறுத்துகிறேன்.

மீண்டும் என்னுடைய இலக்கிய, இலக்கண ஆசங்கைகளோடு உங்களை அணுகுவேன். இப்படிக்கு, உங்கள் மாணவன், செ.சிறீக்கந்தராசா.

**'இனிக்காத இலக்கணம்' நூலுக்கு உமாமகேசுவரன் எழுதிய விமரிசனம்:**

ஆறு மாதம் அயல் நாட்டில் வசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த நாடு இங்கிலாந்து. இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கமும் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் இலண்டன் கிளையும் இணைந்து என்னை அங்கு அழைத்தன. அங்கே ஆறு மாதம் நான் தங்கியதால் அவர்களுக்கு ஏதேனும் பயன் கிடைத்ததா? என நான் அறியேன். எனக்குச் சில நலன்கள் விளைந்தன.

விளைந்த நலன்களுள் முக்கியமானதாக நான் கருதுவது சிலரது அன்பும் அறிமுகமும் கிடைத்ததையே. அப்படிக் கிடைத்த பரிசயங்களுள் முக்கியமானதொன்று தமிழறிஞர், வழக்கறிஞர் திரு. செல்லத்தம்பி சிறீக்கந்தராசா அவர்களது பரிசயமே. அவருடனான பரிசயம் ஏற்பட்ட பின்பே திருக்குறளில் வரும் ஒரு குறளை நான் முழுமையாக விளங்கிக்கொண்டேன். நவில் தொறும் நூனயம் போலும் பயில் தொறும் பண்புடையாளர் தொடர்பு என்பதே அந்தக் குறள்.

பத்துக்கு மேற்பட்ட நூல்களை அவர் எழுதி இருக்கிறார். வழக்கறிஞர் ஆதலால் சட்டநூல்கள் எழுதியிருக்கிறார். தமிழறிஞராதலால் இலக்கண நூல்கள் சில எழுதியிருக்கிறார். பேசாதவை பேசியவை என்ற தலைப்பில் அருமையான கவிதை நூல் ஒன்று வெளிவந்துள்ளது.


இனிக்காதா இலக்கணம் என்ற நூல் என்னைப் பெரிதும் கவர்ந்தது. தமிழ் இலக்கணத்தை இன்றைய மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்படுத்தற்குரிய இன்றியமையாத நூல் இது.


எனக்கு வெகுநாளாகவே ஒரு சந்தேகம் இருந்தது. தமிழில் மாணவருக்கு பிழை திருத்தம் எனப் பயிற்சி கொடுப்பார்கள். கோடாலி - கோடரி என்ற சோடியும் அவற்றுள் ஒன்று. கோடாலி பிழை கோடரி சரி என்று கற்பிப்பார்கள். கோடாலி என்பதுக்கு இலக்கிய வழக்கு நிறைய உள்ளது. கோடரி என்ற சொல் இலக்கிய வழக்கில் இல்லை. கோடாலி பிழை என்றும் கோடரி சரி என்றும் கற்பிக்கிறார்களே என்று சங்கடப்பட்டேன்.


என் சந்தேகத்தைத் தீர்க்க ஒருவர் இல்லையே என இரங்கும் நிலையில் இருந்தேன். எந்தை அமரர் திரு. சி. கதிரிப்பிள்ளை அவர்கள் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரின் மாணவர் அவர் மறைந்து விட்டார். எனது மற்றொரு ஆசிரியர் இலக்கண வித்தகர் திரு. இ. நமசிவாய தேசிகர். தொல்காப்பியத்தைப் பதிப்பித்துதவிய பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களின் மாணவர் அவரும் மறைந்து விட்டார். இனி யாரிடம் ஏற்ற விளக்கம் பெறுவது என்று கலங்கினேன். இந்தநிலையில் திரு. சிறீக்கந்தராசா அவர்களோடு பரிசயம் ஏற்பட்டதால் இது குறித்துக் கலந்துரையாடினேன். விளைவு விரிவானதொரு கட்டுரை.

அந்தக் கட்டுரையைப் படித்ததும் ஆனந்தவிகடனின் கலைவிமரிசகர் பூவராகன் சொன்னது நினைவுக்கு வந்தது. பூவராகன் இந்தியக் குடியரசின் முன்னைநாள் தலைவர் தத்துவஞானி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் தன்னிடம் கூறியதாக ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார். அது இது: "We discover by intuition; we prove by logic."

திரு. சிறீக்கந்தராசா அவர்களின் இனிக்காதா இலக்கணம்? என்ற நூலின் 264 ஆம் பக்கம் முதல் 267 ஆம் பக்கம் வரை பரந்து விரிந்திருக்கும் கோடாலியா - கோடரியா? என்ற தலைப்பில் அமைந்த கட்டுரை அவரது ஆராய்ச்சி வன்மை எத்தகையதென்பதை எடுத்துக் காட்டும் "பதச்சோறு". பானை சோறானா [illegible] தானே!



### வழக்கில் உள்ளதும் வழுவற்றதும்

ஒருபொருட் சொல்லுக்கு இருவித வரிவடிவ வழக்கு (நடைமுறை) அல்லது தவறான வழக்கு உள்ள போது சரியானதை ஆதாரத்துடன் எவ்வாறு நிரூபணம் செய்வது? உமாமகேசுவரன் விடை பகர்கிறார்: முதலில் இலக்கிய வழக்கைப் பார்க்கவேண்டும். பிறகு இனத்தைப் பார்க்கவேண்டும். இலக்கியத்தில் இருந்து ஆதாரம் காட்டவேண்டும். சான்றோர் இலக்கியம் கண்டதற்கே இலக்கணத்தை வகுத்தனர். இலக்கண விதியையும் கவனிக்க வேண்டும்.

### உமாமகேசுவரன் நாட்குறிப்பிலிருந்து சில:

**இலக்கியவழக்கில் கோடாலி:**

அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனாம்
வஞ்சப் பலக்காட்டை வேரற வெட்டி வளங்கள்செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சக் களைபறித் தேன்வளர்த் தேன்சிவ போகத்தையே

*பட்டினத்தார் பாடல்*

கரும்பு பிடித்தவர் காயப்பட்டாரங்கொர் கோடலியால்
இரும்பு பிடித்தவ ரின்புறப் பட்டா ரிவர்கணிற்க
அரும்பவிழ் தண்பொழில் சூழணி யாரூ ரமர்ந்தபெம்மான்
விரும்பு மனத்தினை யாதொன்று நானுன்னை வேண்டுவனே

*அப்பர் தேவாரம்*

**கோடாலி இனம் பற்றி குந்தாலியோடு சேரும்:**

குந்தாலி கிணறு வெட்டுவதற்குப் பயன்படும் கருவி. கோடாலி மரம் தறிக்க, விறகு வெட்டுவதற்குப் பயன்படும் கருவி.

எனவே இனம் பற்றியும் இலக்கிய வழக்குப் பற்றியும் கோடாலியே சரி என்பது நிரூபணமாகிறது.

### திருநிறை செல்வன்! திருநிறை செல்வி !

கடந்த வாரம் திருநிறை செல்வன்! திருநிறை செல்வி! என்ற உப தலைப்பின் கீழ் வந்த பகுதியில் பிரசுரத்தின் போது ஏற்பட்ட தவறுக்கு வருந்துகிறோம்.

(ஆ-ர்)

### திருத்திய வடிவம் இது:

திருமண அழைப்பிதழ்களில் மணமக்களை அடைமொழி இட்டு எழுதும் வழக்கம் உண்டு. மணமகனை திருநிறைச்செல்வன் என்றும் மணமகளை திருநிறைச் செல்வி என்றும் வல்லினம் மிகுமாறு எழுதுவது தவறு என்று உமாமகேசுவரன் கூறித் தருகின்ற விளக்கம்:

நிறைச் செல்வன் என்றால் நிறை (பாரம்)கூடிய செல்வன் என்று பொருள் கொள்ளப்படும்; எப்போது திருநிறைச்செல்வன் ஆக இருந்தார் (நிறை கூடினார்) என்ற வினாவும் எழும். திருநிறை செல்வன், திருநிறை செல்வி என்று எழுதுவதே சரி என்றும் கூறுகிறார். திருநிறை செல்வன் என்று வாழ்த்தும் போது, எழுதும் போது திரு நிறைந்த, திருநிறைகின்ற, திருநிறையும் செல்வன் என்று விரித்துப் பொருள் கொள்ளலாம்; இது முக்காலத்துக்கும் பொருந்தும்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பெண்கள் சுயஉதவிக் குழுக்களால் நடத்தப்படும் வானொலி நிலையம்

# அயல் தேசத்தில் சில நாள்கள்... 8

டிலீப் அமுதன்

ஹைதராபாத் நகருக்கு வெளியே முதன் முதலில் சென்றோம். தெலுங்கானாவின் புறநகர்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. நகரிலும் நகருக்கு வெளியேயும் பல வீடுகளில் செம்மஞ்சள் கொடி கட்டப்பட்டிருந்தது. அதில் இராமரின் படமும் பொறிக்கப்பட்டிருந்தது. சில வாரங்களுக்கு முன்னர்தான் அயோத்தியில் இராமர் கோயில் திறக்கப்பட்டிருந்தது. அதன்போது பரவலாக அங்குள்ள வீடுகளில் இந்தக் கொடி கட்டியதைக் காணமுடிந்தது.

சகீராபாத்தை நோக்கிய எங்களின் பயணம் நீண்டது. கிட்டத்தட்ட 4 மணி நேரப் பேருந்துப் பயணம். கொஞ்சம் 'போறிங்காகத்தான்' இருந்தது. பலர் பேருந்தில் தூங்கினார்கள். ஆனால் சகோதர மொழி நண்பர்கள் பாடல்களைப்பாடி கொஞ்சம் பயணத்தை கலகலப்பாக்கினார்கள். அதிவேக நெடுஞ்சாலையின் ஊடாகப் பயணித்தோம். வீதியின் இருமருங்கிலும் பெரும்பாலும் வயல்களே காணப்பட்டன. இடையிடையே குடிமனைகள். அதை அண்மித்து நகரங்கள் இருந்தன. ஹைதராபாத்தில் புறப்பட்ட பேருந்து சகீராபாத்தில்தான் நிறுத்தப்பட்டது. அங்குள்ள கிராமத்துக்குள் சென்றோம்.

இந்தியாவில் முதல்முறையாக பெண்கள் சுயஉதவிக் குழுக்களால் நடத்தப்படும் வானொலி நிலையத்தைப் பார்வையிடுவதற்காகவே சென்றோம். வானொலி நிலையத்துக்குச் செல்வதற்கு முன்னர், அதை இயக்கும் பெண்கள் சுயஉதவிக் குழுவின் மையத்துக்கு அழைத்துச் சென்றார்கள். மண் சிமெந்து இரண்டாலும் இணைத்து கட்டப்பட்ட கட்டடம். கீழே நிலவிரிப்பில் அமர்ந்தோம். அங்கு புரொஜெக்டரில், வானொலி நிலையத்தின் வரலாறு மற்றும் பெண்கள் சுயஉதவிக் குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பான காணொலிகளை ஒளிபரப்பினார்கள். கடும் களைப்பிலிருந்த எமக்கு கஞ்சி போன்ற ஒன்றை வழங்கினார்கள். அதைப் பருகிக்கொண்டே அவர்களின் காணொலிகளைப் பார்வையிட்டோம். அங்கு எங்களை கமெராவில் ஒருவர் ஒளிப்பதிவு செய்தார். எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. அவர் வயதான பெண்மணி. நவீன கமெராவை, 'அசால்டாக' கையாண்டுகொண்டிருந்தார். அவரின் வயது 65. அவர் மாத்திரமல்ல அங்குள்ள பல பெண்கள் எல்லோரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இவ்வாறு கமெராவை சரளமாகக் கையாள்வார்களாம். எங்களைப் படம்பிடித்த அவரை சகலரும் படம்பிடித்துக்கொண்டோம். அங்கிருந்து சில மீற்றர் தூரம் வெளியே சுற்றிப் பார்த்தோம். தமிழகத் திரைப்படங்களில் வருவதைப்போல கிராமிய வாசம் தெறிந்தது. மண் குடிசை வீடுகள். புளியமரத்தடியில் திண்ணை. வித்தியாசமாக இருந்தது. அந்த அனுபவங்களை ரசித்துக்கொண்டே நடந்தோம். வெயில் கொளுத்தியது. உடம்பைச் சுட்டெரித்தது. பேருந்தில் ஏறினோம். பேருந்தின் 'ஏசி 'எங்களுக்கு இதமாக இருந்தது. மதியம் 1 மணியைத் தாண்டியிருக்கும். பசியுடன் சிறிது தூரத்திலுள்ள வானொலி நிலையத்துக்குச் சென்றோம்.

வானொலி நிலையம் அமைந்திருந்த இடத்தைப் பார்க்கும்போது திரைப்படங்களில் வரும்1980 ஆம் ஆண்டு காலத்து கட்டடத்தைப்போன்று இருந்தது. வானொலி நிலையத்துக்கு முன்பாக சில கூடாரங்கள் இருந்தன. இலங்கையில் நெல்லை அடுக்கி வைப்பதற்கு இவ்வாறான கூடாரங்கள் அமைப்பதாகப் படித்திருக்கிறேன். அதையொத்த கூடாரங்கள் இருந்தன. அவை கொஞ்சம் பாழடைந்திருந்தன. அந்தப் பிரதேச பிள்ளைகளின் மாலைநேரக் கல்விக் கூடங்கள் அவை என்று எங்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். அந்தக் கூடாரங்களினுள் உடைந்த கரும்பலகைகள்தான் அதற்குச் சான்றாக இருந்தன. அவற்றைப் பார்வையிட்டு முடித்துவிட்டு வானொலி நிலையத்துக்குள் பிரவேசித்தோம்.


இது 1998ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவில் பெண்கள் சுய உதவிக் குழுக்களால் உருவாக்கப்பட்ட முதலாவது சமூகவானொலி. 'சங்கமம்' என்று பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.

விளிம்புநிலை சமூகங்களைச் சேர்ந்த பெண்கள்தான் இதன் பங்குதாரர்கள். நிலையான விவசாயம், பெண்களின் உரிமைகள் மற்றும் உள்ளூர் கலாசாரம், கிராமப்புற பெண்கள் தங்கள் சமூகத்தில் குரல் கொடுக்க அதிகாரம் அளிப்பது போன்ற பிரச்சினைகளில் இந்த வானொலி நிலையம் கவனம் செலுத்துகிறது. வானொலி நிலையம் என்று குறிப்பிட்டாலும் அது சமூகவானொலி என்பதால், இரவு 7 மணியிலிருந்து 10 மணி வரைதான் இயக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் அங்கிருந்த 200 கிராமங்களில் கேட்டார்கள். தற்போது 100 கிராமங்களிலேயே கேட்கின்றார்கள் என வானொலி நிலையத்தில் நாங்கள் சென்றபோது பொறுப்பாக இருந்த பெண்மணி பதிலளித்தார். ஆரம்பகாலத்து உபகரணங்களைப் பயன்படுத்தியே இப்போதும் வானொலி ஒலிபரப்பை செய்கின்றார்கள். கால ஓட்டத்துக்கு ஏற்ப அவர்கள் தங்களை மாற்றவில்லை. அதுவே அவர்கள் பின்னடைவுக்கு காரணமாக இருக்கலாம்.


முன்னைய காலங்களில் அந்தப் பிரதேசத்தின் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் இந்தச் சமூக வானொலி பெரிய தாக்கத்தை செலுத்தியது. ஆனால் தற்போது சந்தைப்படுத்தலுக்கான உத்திகள் மாறியுள்ள நிலையில் வானொலி நிலையத்தின் தேவைப்பாடு மக்களிடத்தில் குறைந்துள்ளது.

எனக்கு மட்டுமல்ல எங்கள் எல்லோருக்கும் அன்றைய அந்தக் களப் பயணம் பெரிதும் திருப்தியைத்தரவில்லை. மிக நீண்ட தூரம் பயணித்து அதைப் பார்வையிடுவதற்குரிய கனதியை அது கொண்டிருக்கவில்லை என்பது எங்கள் எல்லோரதும் கணிப்பு. இதை நான் உட்பட எல்லோரும் எமது பின்னூட்டத்தில் தெரிவித்திருந்தோம். அங்கிருந்து கிட்டத்தட்ட 2 மணியளவில் புறப்பட்டோம். எல்லோருக்கும் களைப்பு. பசியும் வேறு. பேருந்தில் ஏறியதும் எல்லோரும் சோர்ந்து அமைதியாக இருந்துவிட்டோம். ஹைதராபாத் நோக்கிப் பேருந்து புறப்பட்டது. சுமார் ஒரு மணி நேரப் பயணத்துக்குப் பின்னர் அதிவேக நெடுஞ்சாலையிலிருந்த ஹோட்டல் ஒன்றுக்குச் சென்றோம். மதியச் சாப்பாட்டுக்கு ஓடர் கொடுக்கும்போது பி.ப. 3 மணியாகியிருந்தது.

நான் மற்றும் 3 சகோதர மொழி நண்பர்களுமாக 4 பேர் மாத்திரம் சைவ உணவை ஓடர் செய்தோம். ஏனைய அனைவரும் விதம் விதமான அசைவ புரியாணியை ஓடர் செய்தார்கள். அவர்கள் எங்களை ஒரு ஏளனப் பார்வையும் பார்த்தார்கள். அதைவிட நாங்கள் ருசியான உணவை மிஸ் பண்ணுவதாகவும் சொன்னார்கள். உணவின் அளவு தெரியாமல் அளவுக்கு அதிகமாக ஓடர் கொடுத்து அவர்கள் திணறியதும் நடந்தது. பசிக்களைப்பால் சுருண்டிருந்த எங்களுக்கு அந்த உணவு தேவாமிர்தம் போன்றிருந்தது. அன்றைய தினம் எங்களுடன் வந்திருந்த சகோதர மொழி ஊடகச் சகோதரி ஒருவரின் பிறந்தநாள். மதிய உணவு முடித்த பின்னர், அவருக்கான பிறந்த நாள் கேக்கை சர்ப்பிரைஸாக வாங்கி வெட்டினோம். அதை முடித்துக்கொண்டு பி.ப. 4.15 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டோம். இரவு 8 மணியளவில் மீண்டும் விடுதியை வந்தடைந்தோம். இரவு உணவை விடுதியில் எடுத்துக்கொண்டோம்.



(பயணம் தொடரும்)



## வாசிப்பு வரம்

உலகை வென்ற ஆன்றோர்
அதிகம் வாசித் தவர்களேயாம்
பலவாய் நூல்கள் தேடிப்
படித்தோர் என்றும் வீழ்ந்ததில்லை
உலவும் நூல கங்கள்
உயர்ந்தோர் பலரை உரைப்பனவே
கலக்க மின்றிக் கற்று
கடைசி வரையும் நிமிர்ந்துநிற்போம்

அறிவள் ஜோராய் வாழ
அவசி அப்து படிக்கவேண்டும்

வறிய நிலமை நீங்க
வாசிப் பொன்றே துணையாகும்
நறிய மலராம் நூல்கள்
நன்றே நாமும் சுவாசித்தால்
அறிவை நமக்குத் தந்தே
அகிலம் மீதில் வாழவைக்கும்

வாசி இன்றே வாசி
வாசிப் பொன்றே வரமாகும்
நேசி நீயும் நேசி
நெடிய புலமை உனதாகும்
ஊசி போன்ற கூர்மை
உன்றன் அறிவில் சேர்ந்திருக்கும்
பேசிப் பெருமை யாகப்
வீறு நடையில் உலாவருவாய்

உடுவிலூர்க்கலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ப்பனில்லா மந்தைகள்



ந.பரமேஸ்வரன்

பிரித்தானியரின் வருகைக்கு முன்னர் இலங்கை மூன்று இராச்சியங்களாக பிரிக்கப்பட்டிருந்தமை அனைவருமறிந்த ஒன்று. பிரித்தானியர் தமது நிர்வாகத்தை இலகுபடுத்துவகற்காக மூன்று இராச்சியங்களையும் ஒன்றிணைத்தனர். இலங்கையில் சட்டசபை அறிமுகமான காலந்தொட்டு தமிழ்ப்பிரதிநிதிகள், தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்துள்ளனர்.

சட்டசபையில் முதலாவது தமிழ்ப் பிரதிநிதியாக பிரித்தானியரால் நியமிக்கப்பட்ட (ஆரம்பத்தில் தேர்தல் நடைபெறவில்லை பிரித்தானிய ஆளுநரே ஒவ்வொரு இனத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதிகளை நியமித்தார்) சேர். முத்துக்குமாரசாமி அரிச்சந்திரபுராணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விக்ரோறியா மகாராணியின் முன்னிலையில் தானே நடித்து காட்டியிருந்தார். சத்தியம் தோற்காது என்ற தத்துவத்தை உலக அரங்குக்கு எடுத்துச்சென்றார். கிளைமாக்ஸான மயானகாண்ட காட்சியில் விக்ரோறியா மகாராணி மயங்கி வீழ்ந்தார் என்பது வேறு கதை; ஒரு அரசன் சுடலைக்காவலனாக மாறுவதை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை.



முத்துக்குமாரசாமியின் பின்னர் தமிழர்களின் பிரதிநிதியாக சட்டசபைக்கு தேர்தல்மூலம் தெரிவுசெய்யப்பட்ட சேர். பொன். இராமநாதன் மூவின மக்களுக்கும் ஆற்றிய சேவைகள் அனைவரும் அறிந்த ஒன்று.

இராமநாதனுக்குப்பிறகு சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட சேர். கனகசபை, எதிர்மன்னசிங்கம், பாலசிங்கம், மருத்துவர் றொக்வூட், வைத்திலிங்கம் துரைசாமி போன்றோரும் தம்மாலான உதவிகளை தமிழர்களுக்கும் நாட்டுக்கும் செய்துள்ளனர்.

பிரித்தானியர் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய போது தமிழர்களின் தலைவன் என அழைக்கப்பட்ட ஜீ.ஜீ.பொன்னம்பலம் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸை உருவாக்கி சிறுபான்மையினருக்கு நாடாளுமன்றத்தில் சமபலப் பிரதிநிதித்துவம் வேண்டுமென வலியுறுத்தினார். ஆனால் பிரித்தானியர் ஜீ.ஜீ.யின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. சுதந்திரமடைந்ததும் ஜீ.ஜீ. அமைச்சரவையில் இணைந்து கொண்டார். செல்வநாயகம் 1949ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சியை ஆரம்பித்து தமிழர்களுக்கு சமஷ்டி ஆட்சி தேவை என வலியுறுத்தி தனது இறுதி மூச்சு வரை தமிழர்களுக்காகப் போராடினார். சிங்கள அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்ட போதும் இலங்கையை ஆட்சிசெய்த பண்டாரநாயக்கா, டட்லி சேனநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோருடன் தமிழர்களின் பிரதிநிதியாக பங்கு பற்றி ஒப்பந்தங்களை செய்து கொண்டார்.

1972 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா குடியரசு அரசமைப்பு உருவாக்கப்பட்டபோது மூன்று கோணங்களில் மூன்று வெவ்வேறு கோரிக்கைகளுடன் செயற்பட்டுக்கொண்டிருந்த தமிழ்த் தலைவர்கள் மூவரும் ஒன்றாக இணைந்து (ஜீ.ஜீ. பொன்னம்பலம் கூட்டாட்சி, செல்வநாயகம் சமஷ்டி, சுந்தரலிங்கம் தமிழ் ஈழம்) சைவபரிபாலனசபை மண்டபத்தில் ஒன்று கூடி தமிழர் விடுதலைக்கூட்டணியை உருவாக்கினர். மூன்று திசைகளில் பயணித்துக்கொண்டிருந்த தமிழ்த் தலைவர்களை ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்த பெருமை வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் தலைவர் ஞானமூர்த்தியையே சாரும்.

செல்வநாயகம் காலமானதும் அமிர்தலிங்கம் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமை போன்ற சில வரலாற்றுத்தவறுகளை இழைத்திருந்தாலும் ஈழப்போராட்டதை (ஈழப்போராட்டத்தின் நியாயத்தை )சர்வதேச மயப்படுத்தினார். ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்த அப்பால் தனது இலட்சியத்தில் உறுதியாக இருந்து தன்னையும் தனது குடும்பத்தையும் ஈழத்தமிழர்களுக்காக ஆகுதியாக்கினார்.

ஆயுதப்போராட்டம் நிர்மூலமாக்கப்பட்டதும் சம்பந்தன் ஏதோ ஒப்புக்குச்சப்பாணி என்ற மாதிரி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை கலையவிடாமல் பார்த்துக் கொண்டார். இன்று தமிழ்த் தேசியம் சுயநலப்பிசாசுகளின் கைகளில் சிக்கி கோயில் வாசலில் அடித்த சிதறு தேங்காய் மாதிரி சிதறிக்கிடக்கிறது. தமிழ்க் காங்கிரஸ் கட்டுக்கடங்காத பந்தயக்குதிரையாக வீறு கொண்டு பாய்கிறது. தமிழரசுக்கட்சி, செல்வாவின் பேரனைக் களமிறக்கியுள்ளது. செல்வாவின் பேரன் தமிழரசுக் கட்சியில் களமிறக்கப்பட்டாலும் நாணயக்கயிறு யார் கையில் இருக்கிறது என்பது முன்பள்ளிப்பிள்ளைக்கும் தெரிந்த விடயம். இன்று ஞானமூர்த்தி போன்று அர்ப்பணிப்புடன் செயலாற்றக்கூடிய நாட்டுப்பற்றாளர்களும் இல்லை. மக்ளுக்காக சேவை செய்யும் நிலையில் போலித் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளும் இல்லை. இந்த சுயநலப்பிசாசுகளின் தன்னிச்சையான செயற்பாடுகளால் தமிழ் மக்கள் செய்வதறியாது திணறிக்கொண்டிருக்கினறனர். தமிழ் மக்களில் ஒரு சாரார் இவர்களுக்கு இம்முறை தேர்தலில் பாடம் புகட்ட வேண்டுமென கறுவிக்கொண்டிருக்கின்றனர்.

இன்னொரு சாரார் என்ன இருந்தாலும் தமிழ்த்தேசியத்தை விட்டுக்கொடுக்கமுடியாது என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். இவர்களும் யாருக்கு வாக்களிப்பது என்று தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். செல்வநாயகம் இறக்கும் தருணத்தில் சொன்னது போல் 'கடவுள் தான் தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டுமா?' 1621இல் போர்த்துக்கீசரால் நிர்மூலமாக்கப்பட்ட கடைசி இந்து தமிழ் இராச்சியத்தின் மக்கள் 400 வருடங்களின் பின்னர் மேய்ப்பன் இல்லாத மந்தைகளின் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

## உளர்ப்திணம்

பாகம் 3

இராகவன்

இந்துமதியக்காவின்ர தாத்தாதான் எங்கட ஊரில ஒழுங்காப் பேப்பர் வாசிக்கிறவர். அதோட ஒவ்வொரு நாளும் இரவு 9.15 தொடங்கி 9.45 வரை ஒலிபரப்பாகிற பி.பி.சி. தமிழோசையும் கேக்கிறவர். அண்டிரவும் அவர்பி.பி.சி. தமிழோசையக் கேட்டுப் போட்டுத்தான் வந்து இந்தச்செய்தியைச் சொன்னவர் எண்டு நினைக்கிறன். இதைக் கேட்டோண்ண எல்லாருக்கும் சரியான ரென்சனாப்போச்சு. பகலெண்டாலும் பரவாயில்லை. இது இரவெல்லே. நவண்ணா வீட்டில தான் நானும் அம்மம்மாவும் அண்டிரவு நிண்டனாங்கள். கையில கொண்டு போகக்கூடிய சாமான் சக்கட்டுகளை எடுத்துக்கொண்டு அங்கையெல்லாரும் வெளிக்கிட்டினம். எனக்குத் தான் என்ன செய்யிறதெண்டு விளங்கேல்ல 1987 ஒப்ரேசன் லிபரேசன் மூட்டங் கூட வடமராட்சிச் சனம் முழுக்க இடம்பெயரேக்குள்ள கூட நான் அம்மாவோடதான் வீட்டில நிண்டனான். ஓர் இடமும் வெளிக்கிடேல்ல. அதால அண்டிரவும் எனக்கு வெளிக்கிட மனம் வரேல்ல. நான் அம்மம்மாவைக் கூட்டிக்கொண்டு வீட்டை போய்ப்படுப்பமெண்டு வெளிக்கிட்டன். நவண்ணாவின்ர அத்தான், 'தம்பி! நீமட்டுமெண்டால் பரவாயில்ல. ஓடிக்கீடித்தப்புவாய். ஆனால் உன்ர அம்மம்மா வயது போன மனிசி. தற்செயலா ஏதும் நடந்தால் அவவால ஓடிக்கீடித்தப்பேலுமே? அதால பேய்வேல பாராமல் எங்களோட வெளிக்கிடு" . எண்டு வெருட்டினார். அதைக் கேட்டு அம்மம்மா மனிசியும் பயந்துபோச்சு.

03

அம்மா நிண்டிருந்தால் உயிர்போனாலும் வெளிக்கிட வேண்டி வந்திருக்காது. பேந்தென்ன நானும் சைக்கிளை எடுத்து முன்னுக்கு அம்மம்மாவை ஏத்திக் கொண்டு நவண்ணா வீட்டாக்களோட வெளிக்கிட்டன். தல்லையப்புலம் வீரபத்திரர் பத்திரகாளிகோயில் கழிய வாற தரவைக்குள்ளால இறங்கினம். அதுக்குள்ள சைக்கிள் ஓடேலாது. அதால அம்மம்மாவை முன்னுக்கு வைச்சு உருட்டிக் கொண்டுதான் போனனான். வல்லிபுரக்கோயில் கடல் தீர்த்தத்துக்குப் போற கணக்கில மண்போட்டா மண் விழாத சனம். முதல்ல எங்க போறதெண்டு தெரியேல்ல. அதால நேர போனால் கறுக்காய் றோட்டில ஏறலாம். கறுக்காய்க்குப் போய்ப்பிறகு எங்க போறதெண்டு யோசிப்பம் எண்டு நவண்ணா சொன்னான். அப்ப அவன் வரணியில இயங்கின "கலைவாணி கல்விநிலையம் 'எண்ட ரியூட்டரியில் ஏ.எல். வகுப்புக்கு இந்துநாகரிகம், இந்துசமயம் இரண்டும் படிப்பிச்சவன். அதால நவண்ணாவுக்கு வரணி முழுக்கத் தனிச்செல்வாக்கிருந்தது. அந்தத் துணிவிலதான் அவரின்ர வீட்டாக்கள் வெளிக்கிட்டவை. அதோட எள்ளோட சேர்ந்த எலிப்புழுக்கை கணக்காய் நானும் அம்மம்மாவும் இழுபட வேண்டிவந்தது.

அந்தத் தரவைக்குள்ளால நோர்மலாய் நடந்து போறதே சிரமம். இதில சைக்கிள்ள ஒராளை முன்னுக்கு வைச்சுத் தள்ளிக்கொண்டு போறதெண்டால் எப்பிடியிருக்கும்? பகலெண்டாலும் பரவாயில்லை ஒரு மாதிரிச்சமாளிக்கலாம். இது இரவுநேரம், எங்க பள்ளாங் கிடக்கு? சகதி கிடக்கு? திட்டிக் கிடக்கு? ஓர் இழவுந்தெரியாது. அதுக்குள்ள புல்லுக் கட்டையள் காலில சுள்சுள்ளெண்டு குத்தக் குத்தத்தான் நடக்க வேண்டியிருந்தது. அந்தளவு சனத்துக்குள்ளயும் கெதியா நடக்கவுமேலாது. எறும்பு ஊர்ற மாதிரித்தான் போவேண்டியிருந்தது. சாமஞ்சாமமாய் நடந்து ஒருமாதிரி மெயின் றோட்டில மிதந்து இடைக்குறிச்சிக்குவந்து சேர்ந்தம். இதுக்குள்ளையும் எனக்கொரு சின்னச் சந்தோசம். நாளைக்கு வாணிவிழாவில கதை வாசிக்கிற சோலியில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தல் ;

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைத் தேடிப்பெற்றுக் கொள்ளவேண்டியதும் காலத்தின் கட்டாயமாகிறது. அதனூடாக தமிழ் அரசியல் பரப்பை அடுத்த தலைமுறையிடம் கையளிக்க, தகுந்தவர்களை நாம் இனங்காணவேண்டும்.

அவ்வாறு செயலாற்றப் பின்வரும் விடயங்களில் நாம் அதிக அக்கறை கொள்ளவேண்டும்.

1. தமிழ் மக்களாகிய நாம் இம்முறை தவறாது தமது வாக்குகளைப் பயன்படுத்தவேண்டும். அனைவரும் வாக்களிப்பதை ஒரு தார்மீகக் கடமையாகக் கொள்ள வேண்டும். வாக்களிக்கத் தவறும் பட்சத்தில் அதனால் ஏற்படக் கூடிய விபரீத விளைவைப் பிறருக்கு எடுத்துச் சொல்லி அவர்களை வாக்களிக்க ஊக்குவிக்க வேண்டும்.

2. கட்சி வேட்பாளராகக் களத்தில் நிற்கின்ற தமிழர் ஒருவருக்கு வாக்களிக்கவேண்டும். பழையவராயின் அவர் தகுதியை அவரது கடந்த கால அனுபவ அடிப்படையில் தெரிவு செய்யலாம். புதியவராயின் அவர் தொடர்பான சமூக அந்தஸ்தை அல்லது அவர் கொண்டுள்ள சமூக அக்கறையின் அடிப்படையில் தெரிவை மேற்கொள்ளலாம். அந்தவகையில் புதியவர்களையும் தமிழ் அரசியல் பரப்புக்குள் உள்வாங்கிக் கொள்ளலாம். எனவே இந்தத் தேர்தலில் வாக்களிப்பது ஒரு காலத்தின் தேவையாக உணரப்படவேண்டும்.

3. அடுத்து, கடந்து ஆட்சிக் காலங்களில் மத்தியில் ஆட்சி செய்த அரசாங்கங்களுக்கு விலைபோன வர்கள், அவர்களிடம் சுய லாபத்தைப் பெற்றவர்கள், அவர்களுக்குச் சார்பாக எமது மக்களை மந்த நிலையிலே வைத்திருக்க உதவியர்கள், சிங்கள மக்களிடம் "நல்ல பிள்ளை" என்ற பெயரைப் பெற எமது நலன்களை அடைவு வைத்தவர்கள், அரசியலின் பெயரால் அடாவடித்தனம் செய்தவர்கள், அரச அதிகாரிகளை மிரட்டியவர்கள். அரச காரியாலயங்களைத் தமது வாசஸ்தலங்களில் நடத்தியவர்கள், சிறந்த மக்கள் சேவையைக் கருத்தில் கொண்டு பணியாற்றியவர்களை பதவிகளில் இருந்து நீக்கித் தமக்கு அனுசரணையாக இருப்பவர்களை அப் பதவியில் வைத்து அழகு பார்த்ததோடு தமது நலன்களை நிலைநிறுத்தி அரச சேவைக்குப் பங்கம் விளைவித்தவர்கள் எனப் பலரை அடையாளப்படுத்தி அவர்களுக்கு வாக்களிப்பதைத் தவிர்த்து அவர்கள் நாடாளுமன்றம் செல்வதைத் தடுக்கவேண்டும்.

"நாம் நாடாளுமன்றம் சென்றால் இப்போது ஆட்சியிலுள்ள தேசியக் கட்சியை ஆதரிப்போம். அவர்கள் நடவடிக்கைகளுக்குத் துணை நிற்போம். அவர்களோடு சேர்ந்து பயணித்து தமிழ் மக்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வோம்." என்ற கருத்தைச் சில தமிழ்க் கட்சிகள் முன்வைத்துத் தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அதற்கு அரசியல் களத்தில் உள்ள தேசியக் கட்சிப் பிரதிநிதிகள் "அதனைச் செய்வதற்குத்தானே நாம் களத்தில் நிற்கிறோம். அதனைச் செய்வதற்கு இடைத் தரகர்கள் எமக்குத் தேவை இல்லை" என்றவாறு பதிலளிக்கின்றனர்.

எதிர்வரும் தேர்தலில் தமிழர்களது பங்களிப்பையும் அதனால் ஏற்படப்போகின்ற முடிவையும், மாற்றத்தையும் பலர் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். வழமைக்கு மாறாக புதிய கூட்டுகள் களமிறக்கப்பட்டிருக்கின்றன.

இந்தத் தேர்தலில் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு புலம்பெயர் தேசத்திலுள்ள தமிழ் மக்களது கரங்கள் ஆழமாகப் புதைந்திருக்கின்றன. தாமாகவே களமிறங்கியவர்களோடு பலர் வலிந்தும் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி களமிறக்கப்பட்டவர்களது பின்னணியில் உள்ளவர்களது நோக்கம் பெரும்பாலும் எமது மக்கள் நலன் சார்ந்ததாக இல்லை என்றும் சொல்லப்படுகிறது. தமிழ்த் தரப்பு வாக்குகளைச் சிந்திச் சிதறடிப்பதோடு, தமக்குச் சார்பானவர்களை வெல்லவழி சமைப்பதே அந்தப் பிரகிருதிகளின் நோக்கம் என்று சொல்லப்படுகிறது. "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு." எனவே அறிவோடு சிந்திப்போம். "ஆனைக்கும் அடி சறுக்கும்" என்ற நம்பிக்கையோடு பயணிப்போம், நல்ல முடிவை நோக்கி.

# சங்குச் சின்னத்தை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)


சிதைப்பதுதான். அவர் அதனைச் செய்துமுடித்துவிட்டார். ஏனைய கட்சியினரை அனுசரித்து, அரவணைத்துச் செல்லவேண்டும் என்ற பண்பு அவரிடமில்லை. இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சிநிரலை உடையவரின் கட்டுப்பாட்டில் இருக்கும் கட்சியோடு எப்படி ஏனைய மாவட்டங்களில் இணைந்து தேர்தலை எதிர்கொள்ளமுடியும். அதனாலேயே மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் நாம் தனியாகப் போட்டியிடவேண்டிய தார்மீகத் தேவை எழுந்தது. அந்த முடிவை எடுக்கத் தூண்டுமளவுக்கே தமிழரசுக்கட்சியின் செயற்பாடுகளும் அமைந்தன. மாறாக எமது சுயநலத்தால் இந்த முடிவை நாம் எடுக்கவில்லை.

**கே: உங்கள் கூட்டணி பற்றிய மிகப்பெரிய விமர்சனம், பொதுவேட்பாளருக்காக பெறப்பட்ட சங்குச் சின்னத்தை எந்தவொரு தேர்தலிலும் பயன்படுத்துவதில்லை என்ற கனவான் ஒப்பந்தத்தை மீறி, தன்னிச்சையாக அதனை உங்கள் கூட்டணியின் சின்னமாக மாற்றிவிட்டீர்கள் என்பதுதான். உங்கள் கூட்டணியின் சின்னமாக ஏற்கனவே குத்துவிளக்கு இருந்தபோதும், சங்குச் சின்னத்தை இவ்வளவு அவசரமாக நீங்கள் பெறவேண்டிய அவசியம் என்ன? ஒருவேளை பொதுவேட்பாளர் சங்குச் சின்னத்தில் பெற்ற வாக்குகளைப் பெறலாம் என்ற திட்டமா?**

ப: சிவில் சமூகங்களும், எமது ஜனநாயகத் தமிழ்த்தேசியக்கூட்டணியும், ஏனைய சில கட்சிகளும் ஒரு பொதுக் கட்டமைப்பாக ஒன்றிணைந்து, பொதுவேட்பாளரை நிறுத்தியபோது தெரிவுசெய்ததே இந்தச் சங்கு சின்னம். பொதுக்கட்டமைப்பாக சிவில் சமூகங்களோடு, எமது கூட்டணியும் ஒன்றிணைந்து செயற்பட்டதாலேயே பொதுவேட்பாளருக்கு இரண்டு லட்சத்து 26 ஆயிரம் வாக்குகளைப் பெறமுடிந்தது. இதில் எமது கூட்டணியின் பங்களிப்பு என்பது மிக மிகக் காத்திரமானது. இதனை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது . அதேவேளை நாங்கள் யாரும் அந்தச் சங்குச் சின்னத்தை திருடிக் கொண்டு செல்லவில்லை. பொதுக்கட்டமைப்பில் இணைந்திருந்த சிவில் அமைப்புகளும், கட்சிகளும் இணைந்து தான் இந்த முடிவுக்கு வந்திருந்தோம். இதன் பிரகாரம் தான் தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் எழுதப்பட்டது. நாங்கள் சங்குச் சின்னத்தை எமது கூட்டணிக்குப் பெறாமல் விட்டிருப்போமா னால், பொதுவேட்பாளருடன் தொடர்பேயில்லா, தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான ஏதோ ஒரு சுயேச்சைக் குழு சங்குச் சின்னத்தைப் பெற்று, அதன் புனிதத்தை கெடுத்திருக்கும். அப்படியான ஒரு துர்ப்பாக்கிய நிலை வந்துவிடக் கூடாது என்பதற்காகவே, எமது கூட்டணியின் சின்னமாக முதலில் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த குத்துவிளக்குச் சின்னத்துக்குப் பதிலாக சங்குச் சின்னத்தை மாற்றியமைத்தோம். ஆகவே இது பொதுவாக எல்லோரும் ஏற்றுக் கொண்டு எடுத்த ஒரு முடிவாகத் தான் இருந்தது . இது ஒருபோதும் பொதுக்கட்டமைப்பில் நாம் செய்துகொண்ட கனவான் ஒப்பந்தத்தை மீறியதும் அல்ல. இது தனி நபர் எடுத்த முடிவும் அல்ல. பொதுக்கட்டமைப்பில் இடம்பெற்றிருந்த சிவில் சமூகப் பிரதிநிதி களும் அனைத்து தமிழ்க்கட்சிகளும் யாழ்ப்பாணத்தில் நடந்து கொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு என்பதை மிகத் தெளிவாக மக்களுக்கு வெளிப்படுத்துகின்றேன். தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பில் சிவில் சமூகங்களின் சார்பில் இணைந்திருந்த யதீந்திரா திருகோணமலை மாவட்டத்திலும், வசந்தராஜா மட்டக்களப்பு மாவட்டத்திலும் எம்முடன் இணைந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். நாங்கள் எப்போதும், எந்த விதமான நாடகங்களையும் ஆடவில்லை. எந்தவிதமான இழிவான விடயங்களைச் செய்யவும் இல்லை. எங்களுடைய ஒப்பந்தங்களுக்கு எதிராக நாங்கள் செயற்படவும் இல்லை . மாறாக கூட்டாக எடுத்த முடிவுகளின் பிரகாரம் தான் நாங்கள் செயற்பட்டு கொண்டு இருக்கின்றோம் .

# நாட்குறிப்புக்கள்...!

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)



அப்பா எனும் தெய்வம்

**உமாமகேசுவரனது 'அப்பா எனும் தெய்வம்' என்ற கட்டுரையிலிருந்து:**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எனது சைவ நற்சிந்தனை ஒன்றை ஒலிபரப்பியது. ஒலிபரப்புக்கு மறுதினம் அப்பாவிடம் (பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை) சென்றேன். எடுத்த எடுப்பிலேயே "என்ன, இல்லவே இல்லையோ" என்றார். எனக்கு எதுவுமே புரியவில்லை. உரையில் இல்லவே இல்லை என்ற தொடர் இடம் பெற்றுவிட்டது என்பது தெரியவந்தது. வேடிக்கையாக "உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்" என்றேன்; தீட்டிய மரத்திலேயே கூர் பார்த்தேன். அப்பா சிரித்தார். "சொல்லைப் பிரிபார்ப்போம்" என்றார். விழிக்கத் தொடங்கிவிட்டேன்.

தொல்காப்பிய விதியை அனுசரித்தாலும் இல்லை + ஏ என்பது இல்லையே அல்லது இல்லைவே என வருமேயன்றி இல்லவே என வருதற்கிடமில்லை. அப்படி வருவதானால் நிலைமொழி இல்ல ஆதல் வேண்டும். இல்ல என்பதொரு சொல் இல்லை. விதியீறால் அப்படி அது ஆனதுமன்று. எனவே இல்லையேயில்லை என்பதுதான் சரியான தொடர். இப்படி நான் எண்ணியபடி நினைவுலகத்திலிருந்து நனவுலகத்துக்கு வர அப்பாவின் குரல் "இல்லையேயென்னாத இயற்பகை" என்று ஒலித்தது. எந்த விடயத்தையும் நுனித்து நோக்குபவர் அவர்.

**பரிச்சயம் / பரீட்சயம் / பரிசயம்**

பரிசயம் தான் சரி என்பதற்கு உமாமகேசுவரன் தரும் விளக்கம், இலக்கிய ஆதாரம் இது:

போர் ஓய்ந்துவிட்டது. இனிப் பகைவர் என்று எவருமில்லை. ஆனால் போர்த் தினவுமட்டும் சேரனுக்கோ அவன் பட்டத்து யானைக்கோ தீர்ந்தபாடில்லை.

மஞ்சத்தில் தூக்கமின்றிப் புரண்டுகொண்டிருக்கிறான் சேரன். யானையை ஆனைப் பந்தியின் முகப்பிற் கட்டியிருக்கிறார்கள். பௌர்ணமி தினமாதலால் முழுநிலவு மெல்ல மேலெழுந்து வருகிறது. அதைப் பார்த்ததும் பட்டத்து யானையிடம் ஒருவிதப் பரபரப்புத் தொற்றிக் கொள்கிறது. துதிக்கையை முழுநிலவைப் பொழியுந் திங்கள் மேல் நீட்டி அதைப் பற்றிப் பறித்தெடுக்க முனைகிறது.

சேரனோடு களம்பல கண்ட அந்த யானை பகையரசரின் வெண்கொற்றக் குடைகளைத் தன்காலின் கீழ் இட்டுத் தேய்த்தழிக்கும் பழக்கம் உடையது. பழக்க தோஷத்தால் பரிசயத்தால் மேலெழுந்து வரும் முழுநிலவைப் பகையரசனின் வெண்கொற்றக் குடையென்று மயங்கிவிட்டது.

வீறுசால் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற வெறிந்த பரிசயத்தால் தேறாது
செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
[illegible]

முத்தொள்ளாயிரம்

**இன்னோர் இலக்கிய ஆதாரம்:**

இலக்கியம் திருக்குறள்; அதிகாரம் தவம்; குறள் 2. பரிமேலழகர் தரும் உரை விளக்கம்: "பரிசயத்தால் அறிவும் ஆற்றலும் உடையராய் முடிவு போக்கலின், "தவமுடையார்க்காகும்" என்றார்". (பார்க்க: திருக்குறள் பரிமேலழகர் உரை )

**நாட்கள் / நாள்கள்**

இன்று நாள்கள் என்பதை நாட்கள் என்று எழுதுவது இயல்பாகிவிட்டது. தமிழில் 'கள்' விகுதி பன்மைச் சொல்லைக் குறிக்கவும் பயன்படுகிறது. தமிழில் சில சொற்கள் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக வழங்குகின்றன. உமாமகேசுவரனுக்கு 'கள்' போடுவது விருப்பமில்லை. நாட்கள் என்றால் நாட்பட்ட 'கள்' (மது) என்றும் பொருள் கொள்ளலாம்.

நாள்கள் தான் சரி என்பதற்கு உமாமகேசுவரன் காண்பிக்கும் இலக்கிய ஆதாரம் இது:

சம்பந்தர் தேவாரம், வேயுறு தோழி பங்கன் விடமுண்ட கண்டன் என்ற பதிகத்தில் வரும் 2 ஆவது பாடலில் வரும் 3 ஆவது அடியில்: "ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும் உடனாய நாள்க ளவைதாம்" (நாள்கள் அவைதாம்).

தமிழ்நாடு கரூர் மாவட்ட ஆசிரியர் கூட்டணி தமது வலைத்தளத்தில் நாட்கள் / நாள்கள் எது சரி? என்பதற்கு பிறிதோர் விரிவான விளக்கம் தந்து பின்வரும் முடிவை முன்வைத்துள்ளனர்:

நாள்கள், ஆள்கள், பொருள்கள் என்பது ஒரு சொல்லைப் புணர்ச்சியிலிருந்து பிரித்து எழுதுவதாகத்தான் கருதப்பட வேண்டும். மருணீக்கியார் என்பதைப் பிரித்து எழுதுகையில் மருள் நீக்கியார் என்று எழுதுகிறோம். இது குற்றமில்லையே. 'கடவுட்டன்மை' என்றெல்லாம் புணர்த்தி எழுதாமல் 'கடவுள் தன்மை' என்றே எழுதுகிறோம். ஆக, ஒன்றைப் புணர்த்தாமல் எழுதினால், எளிமை கருதி அதைப் பிரித்து எழுதியதாகவே எடுத்துக்கொள்ளலாம். அதனால், நாள்கள், ஆள்கள், பொருள்கள் என்றெழுதுவது அதைப்போல் பிரித்தெழுதிய நிலைமையே. ஒருபோதும் குற்றமாகாது. ஆக, நாட்கள் ஆட்கள் பொருட்கள் என்றெழுதுவதைவிட எல்லா நிலைமைகளோடும் ஒரே கொள்கையுடையவராய் நாள்கள், ஆள்கள், பொருள்கள் என்றே எழுதுக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org